பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 17 சனிக்கிழமை 30.01.2021 கதிர் 86

### இனி அது ரகசியம் அல்ல!

ஆயுதப் போராட்ட ரீதியிலும் அரசியல் கட்டமைப்பு அடிப்படையிலும் முரண்பட்டு, முட்டிமோதும் பல தரப்புகளுடன் எல்லாம் ஒரே சமயத்தில் ஊடாடும் வாய்ப்பு ஊடகவியலாளனுக்கே கிடைக்கும்.

இலங்கையின் மோசமான இன யுத்தத்துக்கு பக்கம்02 »

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் எழுவருமே விடுதலையாகின்றனர்?

### தமிழக அரசியலில் பரபரப்பு!

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோர் விடுதலை செய்யப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுவருவதாக தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறத.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி 1991 – ம் ஆண்டு மே 21– ம் திகதி சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேருக்கு தண்டனை ☞11

## முதல் நாளில் 5,286 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள்!

### எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லையாம்



இந்திய அரசின் வெக் சின்மைத்ரி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனேகா கொரோனாத் தடுப் பூசி வழங்கும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பமானது.

முதலாம் நாளான ☞11

# ஜெனிவாவில் இம்முறை இலங்கை சிக்குவது உறுதி



## ஐ.நா. ஆணையரின் அறிக்கையில் நிரூபணம் என்கின்றது சஜித் அணி

இலங்கை இம்முறை ஜெனிவாக் கூட்டத் தொடரில் சவாலை எதிர்கொள்ளப் போகின்றது என்பது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலிருந்து தெளிவாகின்றது. அரசு குறித்த அறிக்கையை ஆழமாக ஆராய்ந்து, உரியவாறான பிரதிபலிப்பை எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க. ☞2



## மட்டு. கரடியனாறில் நேற்றும் யானை தாக்கி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவு ஈரளக்குளத்தில் யானை தாக்கி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

வயல் பிரதேசங்களில் இருக்கும் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று பலராலும் பேசப்பட்டு வருகின்ற நிலையில் தொடர் துயர்கதையாக யானை தாக்குதல் சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

தற்போது காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. ☞2

## விபத்தில் சாவு!



யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம், அரியாலை பார்வதி ☞2

## முஸ்லிம்கள் திருமண சட்டத்தை நீக்க நாடாளுமன்றில் தனி நபர் சட்டமூலம்!

முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தை இரத்து செய்வதற்கான கோரிக்கை அடங்கிய சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்பிக்கப்படவுள்ளது.

தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் யோசனையாக இது விரைவில் முன்வைக்கப் படவிருப்பதாக எங்கள் மக்கள் சக்தி எம்.பியான அத்துரலியே ரத்தன தேரர் தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 2019ஆம் ஆண்டில் இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த போதிலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் ☞2

DCM யாழ் நகர்

30.01.2021 இன்று முதல்

ஆரம்பம்

A/L 2021, 2022

கலை, வர்த்தக வகுப்புகள்

காலை: 8.00 மணி

இடர்கால பாட அலகு மீட்டல்

பிரத்தியேக வகுப்புக்கள்

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

077 011 9434

நிர்வாகம்

## 9 தமிழக மீனவரையும் விடுதலையைக் கோரி ராமேஸ்வரத்தில் காத்திருப்புப் போராட்டம்!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.30

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்க புறப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 9 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரி மீனவர்கள், உறவினர்கள் ராமேஸ்வரம் மீன்வளத்துறை அலுவலகம் முன் காத்திருப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த 9ஆம் திகதி ☞2

## மேலும் 8 பேர் மரணம் கொரோனா காவு 305

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் 8 பேர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

மொரட்டுவ, பிலியந்தலை, சாய்ந்தமருது, ☞2

## 62 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை

### நேற்றும் 859 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோன வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நேற்றும் 859 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனாவின் மூன்றாவது அலையில் இது வரையில் 58 ஆயிரத்து ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்தியில் அப்படியான வாய்ப்புப் பெற்ற ஒரு சில ஊடகவியலாளர்களுள் நானும் ஒருவன் என்ற பெருமை – தற்பெருமை – எனக்கும் உண்டு.

தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் பாலசிங்கம், நாட்டின் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தன், மாவை, சங்கரி உட்பட்ட கூட்டமைப்புத் தலைவர்கள், ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா போன்ற எல்லோருடனும் அருகருகே அமர்ந்திருந்து உணவுண்டு, தேநீர் அருந்தி, மணிக்கணக்காகப் பேசிய அனுபவம் எனக்குத் தாரளமாக உண்டு.

இப்படிப் பல தலைவர்களுடனும் நான் நடத்திய ஊடாட்டங்கள் குறித்து நேற்று ஒரு தலைவருடன் நீண்ட நேரம் – சுமார் ஒரு மணிநேரம் – ஆற அமர இருந்து இரை மீட்டு உரையாட வாய்ப்புக் கிட்டியது.

அவர் வேறு யாருமல்லர், நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான். பொதுத் தேர்தலில் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவருடன் ஒரு பத்திரிகை நண்பராக மனம் விட்டுப் பேசும் வாய்ப்பு நேற்று மதியம் கிடைத்தது.

வழமையாக இத்தகைய சந்திப்பு, பெரும்பாலும் மதிய விருந்துடன் அல்லது காலை உணவுடன் நடக்கும். 2005 இல் அவர் ஜனாதிபதியான பின்னர் கொழும்பிலும், ஹம்பாந்தோட்டையில் அவரின் கால்டன் இல்லத்திலும் அப்படி உணவுடன் சந்திப்பு வாய்ப்பு பல தடவைகள் – டசின் தடவைகளுக்கு மேல் – எனக்குக் கிட்டியிருக்கின்றது. ஆனால் கொவிட் தொற்று மிரட்டல் காரணமாக நேற்றைய சந்திப்பு வெறும் தேநீருடன்தான்.

புதிய விடயங்கள், எதிர்காலம் குறித்து நாம் அதிகம் பேசவில்லை. எதிர்காலம் குறித்து தீர்மானிக்கும் முன்னணி நிலைமையில் தாம் இல்லை என்பதை சொல்லாடல், பேச்சுமொழி மூலம் குறிப்பால் உணர்த்தினார் அவர்.

*“நான் இப்போது ஜனாதிபதி அல்லன். பிரதமர்தானே. நீங்கள் கேட்கும் தீர்வுக்கான முன்முயற்சிகளை அவர்கள் தானே (ஜனாதிபதி தரப்புத்தானே) ஆரம்பிக்க வேண்டும்.”* – என்று பேச்சின் நடுவில் குறிப்பிடவும் அவர் தவறவில்லை.

அருகே சற்றுத் தொலைவில் அவரின் இணைப்புச் செயலாளர் நின்றிருந்தார்.

*“பிரபாகரனுக்கு உங்கள் தொடர்பாளர் இவர்தானே”* – என்றார் இணைப்புச் செயலாளர்.

*“ஆமாம். லண்டனிலிருந்து வரும் அன்ரன் பாலசிங்கத்தை கட்டுநாயக்காவில் சந்திக்கும் தனித்த ஏற்பாட்டை இவருக்கு மட்டுமே நான் செய்திருந்தேன். அப்போது தொடங்கியது அந்த முயற்சி”* – என்று நினைவைப் பகிந்தார் பிரதமர் மஹிந்தர்.

அப்போது அவர் எனக்கு அளித்த பிரத்தியேக செவ்வியையும், அது ஏற்படுத்திய அதிர்வுகளையும் நான் நினைவூட்டினேன். ஆர்வத்துடன் பழைய நினைவுகளை இரை மீட்டு இருவருக்கு பேசிக் கொண்டோம்.

*“யுத்தம் புரியும் தரப்புகளுக்கு இடையில் நீங்கள் தப்பிப் பிழைத்து இன்றும் உயிரோடு இருப்பதே மெச்சத் தக்க தைரியம்தான்.”* – என்ற சாரப்பட அவர் எனக்கு அளித்த விதந்துரையை புன்னகையுடனும் திருப்தியுடனும் நான் ஏற்றுக்கொண்டேன். அதனைப் பெரும் சாதனையாக அவர் மதித்து ஒன்றுக்கு இரண்டு தடவை மீளவுரைத்தார்.

மதியுரைஞர் பாலசிங்கத்துடனான எனது நெருக்கம் பற்றிய விடயங்களை மீளவும் நினைவூட்டிய அவர் நான் கூறிய விவரங்களை செவிமடுத்தார்.

*“ஜெனிவாத் திருவிழாவை ஆரம்பித்து வைத்தவரே நீங்கள்தானே...?”* – என்று தொடங்கிய நான் பிரேமதாஸாவின் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பட்டியலிட்டு அவை பற்றிய ஆவணப்படங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரங்களுடன் சென்ற அவரை பிரேமதாஸா நிர்வாகம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து உரித்தெடுத்த விடயத்தை நினைவூட்டினேன். அப்போது நடந்த சில சம்பவங்களை விலாவாரியாக விவரித்த அவர் தீடீரென *“இவை எல்லாம் தெரிந்த – அறிந்த – நினைவில் வைத்திருக்கின்ற – பத்திரிகையாளர்கள் இங்கு ரொம்பவும் குறைவு. இவற்றை எல்லாம் – பழைய சம்பவங்களை எல்லாம் – எழுதுங்கள்”* – என்று என்னைப் பார்த்து தீர்க்கத்துடன் கூறினார்.

*“நான் பல விடயங்களை எழுத வேண்டும். காலம் கனியும் போது – நிலைமை சரியாகத் தோன்றும் போது – எழுதுவேன்.”* – என்றேன்.

தமது சட்டத்தரணி அனுபவங்கள் குறித்து விவரித்தார்.

*“சட்டத்தரணி இறுதிப் பரீட்சைக்கு இப்போதும் நீங்கள் தோற்ற முடியும். சிரமத்தைப் பாராது தோற்றுங்கள். படித்து முடியுங்கள்”* – என்று மூத்த சட்டத்தர ணியாக, அனுபவஸ்தராக ஆலோசனை கூறினார்.

*“ஆமாம் இவ்வளவு காலம் இழுபட்டு நான் இறுதிப் பரீட்சையில் இனிமேல் சித்தியடைந்தால் எனக்கு "Attorney at Law' என்று பட்டம் தரமாட்டார்கள், "Attorney at Last' என்றுதான் தருவார்கள்”* என்றேன். அவர் கடகடவென்று சிரித்தார்.

யுத்தக் கொடூரங்கள், இழப்புகள் குறித்து நாங்கள் அதிகம் பேசவில்லை, அவற்றுக்கு இடையே நான் சம்பந்தப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்த தகவல்களையே இரை மீட்டோம்.

*“உங்கள் காலத்தில் இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வையுங்கள். அதற்கு முயற்சி எடுங்கள்”* – என்பது என் பிரதான கோரிக்கையாகவும் வற்புறுத்தலாகவும் இருந்தது.

அந்த வேண்டுகோளுக்கு முன்னைய மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து வரும் கம்பீரப் பதில் இம்முறை வரவில்லை.

*“பார்க்கலாம்”* (We will see) என்றார் ஒரு தடவை.

*“நான் முடிவெடுக்கும் ஜனாதிபதி அல்லன். பிரதமர் தானே...!”* – என்ற அவரின் பொறுமையான பதிலுக்குள் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதை நான் உணர்ந்தேன்.

எனக்கு 90 நடுப்பகுதியில் சந்திரிக்கா காலத்துக்கு நினைவுகள் சென்றன. சந்திரிகா ஜனாதிபதியான போது அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர்.

அந்த நிலைமையில் இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அங்கு தாய் – மகள் உறவு நிலை, இங்கு அண்ணன் – தம்பி ஊடாட்டம்.

ராஜபக்ஷக்களின் அரசில் மஹிந்த ராஜபக்ஷ இன்னும் ஞானத்தந்தைதான் (Godfather). ஆனால் எவ்வளவு தூரம் அவரின் செல்வாக்கு ஆட்சிப் பீடத்துக்குள் உள்ளது என்பது கேள்விக் குறிதான்.

எனினும் தமது சமாதான எத்தனமாக விரைவில் சம்பந்தனைத் தாம் சந்திக்கவிருக்கின்றார் என்பதை அவர் கோடி காட்டினார்.

கூட்டமைப்பினருடன் பேசுவதற்கு ஜனாதிபதி காத்திருக்கின்றார், கூட்ட மைப்பினர்தான் சந்திப்பைக் கோரவில்லை என்றார் பிரதமர்.

நான் வாதிடவோ, நிலைமையைத் தெளிவுபடுத்தவோ முயலவில்லை. விரைவில் நடக்கக் கூடிய மஹிந்த – சம்பந்தன் சந்திப்பின் போது *“பேச்சுக்கான பேச்சுப் பற்றி பேசுங்கள்”* என்று மட்டும் குறிப்பிட்டேன்.

அவருக்கு வயதாகி விட்டது. தமது நம்பிக்கைக்குரிய தம்மவர்கள் விடயத்தைக் கொண்டு நடத்தத் தாம் பார்த்திருக்கும் பக்குவத்துக்கு அவர் வந்து விட்டார் என்று எனக்குத் தோன்றியது. விடயங்களைத் துரிதமாக மீட்டு, விரைந்து முடிவுகளைக் காத்திரமாக எடுப்பதில் வயது ஒரு நெருக்கடியான விடயம்தானே...?

ஓர் அரசியல் தலைவர் – ஊடகவியலாளன் என்ற உறவாடல் நிலையை என்றும் மதிக்கத் தெரிந்த நல்லதோர் முதிர்ந்த அரசியல்வாதி இவர் என்ற உணர்வு மட்டும் நேற்றைய சந்திப்பில் எனக்குக் கிட்டியது என்பேன்.

– மின்னல் –

## ஜெனிவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் வெளியிட்டுள்ள காட்டமான அறிக்கை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நோக்குகையில், எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை சவாலை எதிர்கொள்ளும் என்றே தோன்றுகின்றது.

ஆணையாளரின் அறிக்கையில் போரில் சம்பந்தப்பட்ட இருதரப்புக்கள் தொடர்பிலும் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக போர் முடிவடைந்து சுமார் 11 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இன்னமும் முறையான பொறிமுறை ஒன்றினூடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படாமை தொடர்பில் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் குறித்தும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைத் திருத்தியமைக்குமாறே நாம் வலியுறுத்தினோம். எனினும், அரசு அதனை முழுமையாக இல்லாதொழித்து 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை விரிவாகவும் ஆழமாகவும் ஆராயவேண்டியது அவசியமாகும். அதுமாத்திரமன்றி அதனை முழுமையாக ஆராய்ந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத்தொடரின்போது அதற்கு முறையான பிரதிபலிப்பையும் வெளிக்காட்ட வேண்டிய தேவையிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் அனைத்து விடயங்களையும் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால், அனைத்தையும் புறக்கணித்து விடவும் முடியாது. சர்வதேசத்தின் மத்தியில் ஏனைய நாடுகளின் உதவியின்றி எம்மால் தனித்துப் பயணிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது நாட்டின் மீது சர்வதேசத்தால் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம். எனினும், நாம் இவை அனைத்தையும் நடுநிலையுடன் ஆராய்ந்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையுடனும் கலந்தாலோசித்து, நேர்மறையான தீர்வொன்றை நோக்கிப் பயணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனமான செயற்பாடாகும் – என்றார்.

## மட்டு.கரடியனாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈரளக்குளம் பகுதியில் ஒருவர் நேற்று யானை தாக்குதலில் உயிரிழந்துள்ளார். அவரின் சடலம் கரடியனாறு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில் சாவு!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வித்தியாலய விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிய மயூரன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

தன்னுடைய சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது விபத்து ஏற்படப்போவதை அவதானித்த மயூரன் தப்பிக்க முயன்று பாய்ந்தார் எனவும் வீதியில் அவர் வீழ்ந்தபோது அருகே வந்த வாகனம் அவர் மீது மோதியதாலேயே அவர் உயிரிழந்தார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை மயூரனின் சகோதரனும் விபத்தினால் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 9 தமிழக மீனவரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கிருபை என்பவருக்கு சொந்தமான படகில் புறப்பட்ட கிருபை, நிஜாம்,கவுசிக் உள்ளிட்ட 9 மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்து காரைநகர் கடற்படை முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த ஒன்பது மீனவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இனம் காணப்பட்ட மீனவர் கிளிநொச்சியிலுள்ள கொரோனா சிகிச்சை தனிமைப்படுத்துதல் மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் 8 மீனவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை எடுக்கப்பட்டு அவர்களை மீனவர்களின் விசைப்படகில் தனிமை படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் வழக்கு எதிர்வரும் 8ஆம் தேதி மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது. இதே நேரம் சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் கொரோனா உறுதி செய்யப்பட்ட மீனவர் நிலை குறித்து இந்திய அரசு உடனடியாக மீனவர்களின் உறவினர்களிடம் தெரிவிக்க வேண்டும் எனக் கோரிக்கையை வலியுறுத்தி நேற்று ராமேஸ்வரம் மீன் வளத்துறை அதிகாரி அலுவலகம் முன்பு கைக்குழந்தையுடன் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த ராமேஸ்வரம் மீன்வளத் துறை கூடுதல் இயக்குனர் மீனவர்களின் உறவினர்களிடம் பேச்சு நடத்தினார். தடுப்பில் உள்ள மீனவர்கள் உறவினர்களுடன் தொலைபேசியில் பேசுவதற்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுவதாகவும், கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட மீனவர் நிலை குறித்து உடனடியாகத் தகவல் பெற்றுத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து மீனவர்கள் வரும் 8 ஆம் திகதி விடுதலை செய்யப்படாவிட்டால் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட போகிறார்கள் எனத் தெரிவித்துக் கலைந்து சென்றனர்.

## மேலும் 8 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொலன்னாவ, பாணந்துறை, காலி, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 8 பேரே இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 4 ஆண்களும், 4 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 305 ஆக அதிகரித்துள்ளது.

## 68 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

489 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்து 445 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 55 ஆயிரத்து 398 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 750 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## முஸ்லிம்கள் திருமண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த யோசனை இரத்தாகியது என்று அவர் கூறினார்.

முஸ்லிம் பெண்களுக்கு ஏற்படுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டிய ரத்தன தேரர், ஆகவே மீண்டும் இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் பூரணமாகி வருகின்றன எனவும் தெரிவித்தார்.

# ஜெனிவாவின் 46 ஆவது கூட்டத்தொடர் இம்முறை தமிழருக்குத் தீர்வைத் தரும்!

## நம்பிக்கை வெளியிட்டார் ஸ்ரீநேசன்



கொழும்பு, ஜன.30

ஜெனிவாவில் இம்முறை நடைபெறவுள்ள 46 ஆவது மனிதவுரிமை கூட்டத் தொடரில், தமிழர்களின் போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை எழுந்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் ஞா.ஸ்ரீநேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தமிழர்களின் வரலாற்றில் இனப் படுகொலையென்பது தொடர்கதையாக நடந்திருக்கின்றது. 1958 ஆம் ஆண்டில் முதற்தடவையாகத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை தென்னிலங்கையில் அரங்கேற்றப்பட்டது.

அதற்கு அடுத்ததாக இந்த இனப்படுகொலை வடக்கு - கிழக்கில் மையங்கொண்டிருந்தது. அந்த அடிப்படையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் காரணங்களில்லாமல் கொல்லப்பட்டிருந்தார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்து 73 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்ற காலகட்டத்தில் 53 ஆண்டுகளாக இனப்படுகொலைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்று கடைசியாக முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலையாக ஒட்டுமொத்தமாக அரங்கேற்றப்பட்டிருந்தது.

அந்த வரிசையில், கொக்கட்டிச்சோலை படுகொலை நான் ஆசிரியராக இருந்த 1987ஆம் ஆண்டு காலத்தில் நடந்தது. 157 அப்பாவிகள், அரச உத்தியோகத்தர்கள் என்றும் பாராமல் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதுவரை பொறுப்புக்கூறல் நடைபெறவில்லை, உண்மை கண்டறியப்படவில்லை, நீதி வழங்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாதிருப்பதற்கான உத்திகள் கையாளப்படவில்லை. நிரந்தர அமைதிக்கான அரசியற் தீர்வு கண்டுபிடிக்கப்படவில்லை.

நீண்டகாலமாக உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக எதையும் தீர்க்க முடியாத கையாலாகாத நிலையில் அரசாங்கம் காணப்பட்டது. உள்நாட்டுப் பொறிமுறை பலவீனமுற்றிருந்த காரணத்தால் - உள்நாட்டில் எதையும் சாதிக்க முடியாத நிலை இருந்த காரணத்தால் - இன்று உள்நாட்டில் முடித்து வைக்கப்பட வேண்டிய பொறுப்புக்கூறல், உண்மையைக் கண்டறிதல், நீதியை வழங்குதல், மீள நிகழாமல் தடுத்தல் போன்ற செயன்முறைகள் எமது கையிலிருந்து சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றது என்றால் இதற்கான முக்கிய பொறுப்பை அரசாங்கம் எடுக்க வேண்டும். அரசு இந்த விடயத்தை உள்நாட்டில் முடித்திருந்தால் இந்த விடயங்கள் சர்வதேசமயப்பட்டிருக்கா.

இன்று மனித உரிமை ஆணையாளர் (மிச்சேல் பச்லட்) இந்த விடயத்தில் கூடுதலான கரிசனை செலுத்தியிருக்கின்றார். நீண்டகாலமாகத் தமிழர்களுக்குக் கிடைக்காத நீதி, உண்மையைக் கண்டறிதல் விடயங்களில் இப்போது கடும் தொனியில் அவர் சொல்லியிருக்கின்றார்.

எங்களுக்கு அரசர்கள் நீதியைத் தராதுவிட்டாலும் தெய்வம் மூலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் இம்முறை கருத்தொருமைப்பாட்டோடு ஒன்றாக இணைந்து செயற்படுகிறார்கள். டயஸ்போராக்களும் இதற்கான வேலைகளை நேர்த்தியாகச் செய்தார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் பாதிக்கப்பட்ட மக்களும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் போராட்டங்களை நடத்தினார்கள். ஒட்டுமொத்தமாக இந்தப் போராட்டத்துக்கு நம்பிக்கை தரக்கூடிய ஒரு கீற்றொளி 46 ஆவது மனிதவுரிமை கூட்டத் தொடரில் நாங்கள் அறியக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கின்றது.

சிலரை சில நாள்கள் ஏமாற்றலாம், பலரை பல நாள்கள் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லா நாள்களும் ஏமாற்ற முடியாது என்பதற்கு இது நல்லதோர் உதாரணமாக இருக்கின்றது.

உள்நாட்டுப் பிரச்சினையை உள்நாட்டிலே நீங்கள் தீர்த்திருந்தால் இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்ட நிலைக்கு வந்திருக்காது. இன்று இந்தப் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கின்றதென்றால் இதற்குக் காரணம் உங்களது கையாலாகாத தன்மையும் இந்த இனப்பிரச்சினையை உரிய காலத்தில் தீர்க்காதமையுமே ஆகும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கூரிய ஆயுதத்தால் கணவன் தாக்கி இளம் தாய் ஒருவர் படுகொலை!



ஹற்றன் - கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகமுவ - மாபத்தன பகுதியில் இளம் தாயொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான மாலிகா பிரியதர்ஷினி என்பவரே, அவரின் கணவரால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு மற்றுமொரு நபருடன் கள்ளத்தொடர்பு இருந்தமையை அடிப்படையாக வைத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதென பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி மாலையே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் மறுநாள் 27 ஆம் திகதி மாலை அந்தப் பெண்ணின் கணவர், தாமாகவே முன்வந்து கினிகத்தேனை பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்குள்ளவர்களிடமும் விசாரணையை மேற்கொண்டனர். நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டதன் பின்னர், பிரேத பரிசோதனைக்காக சடலம் நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளது. அதன் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

குறித்த கொலைச்சம்பவம் தொடர்பாக கினிகத்தேன பொலிஸாரும் ஹற்றன் கைரேகை பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 20 லட்சம் டோஸ் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்கின்றது அரசு!

பைஸர் மற்றும் பயோஎன்டெக் நிறுவனத்திடம் இருந்து 20 லட்சம் டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் முன்பதிவு செய்துள்ளது.

அரச மருந்துக் கழகத்தால் இதற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார, தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எத்தனை தடுப்பூசிகளைப் பெறுவோம் என்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியாது எனத் தெரிவித்த அவர், கோவக்ஸ் திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் தடுப்பூசிகளில் பைஸர் சேர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பைஸர் தடுப்பூசியை - 70 பாகை செல்ஷியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்த வேண்டிய நிலையில் அதற்காக 35 முதல் 40 அரச மற்றும் தனியார் களஞ்சியபடுத்தல் நிலையங்கள் உள்ளன என்றும் அமைச்சின் செய லாளர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பைஸரும் ஜேர்மனியின் பயோஎன்டெக் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள குறித்த தடுப்பூசியின் ஒரு டோஸின் விலை கடந்த நவம்பரில் 20 டொலர் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, பிரித்தானியா மற்றும் தென்னாபிரிக்காவில் சமீபத்தில் கண்டறியப்பட்ட புதிய கொரோனாத் தொற்று பிறழ்வுகளுக்கு எதிராக இந்தத் தடுப்பூசி பயனுள்ளதாக இருக்கும் என இரு நிறுவனங்களும் அறிவித்தன.

அந்தவகையில் இந்த வார தொடக்கத்தில், ஐரோப்பிய நாடுகளான டென்மார்க், ஐஸ்லாந்து, சுவிஸர்லாந்து, ஜேர்மனி மற்றும் இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றின் புதிய மாறுபாடு இலங்கையிலும் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா, கொட்டகலையில் விபத்து - மூவர் படுகாயம்!



நுவரெலியா - திம்புள்ள, கொட்டகலை நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த மூவர், வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொட்டகலை நகரில் இருந்து பத்தனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், கொட்டகலை வூட்டன் பசாரில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளில் மோதிய நிலையில் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வானிலும் மோதியுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி எறியப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளானமையுடன் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வான் ஒன்றும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள - பத்தனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக மன்னாரில் விளக்கேற்றல் நிகழ்வு!

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி வடக்கு - கிழக்கில் பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை மாலை மன்னாரில் விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார்மாவட்டபாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன் தலைமையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் தரவன் கோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், தோட்டவெளி, பறப்பான்கண்டல், சங்கன்குளம் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களில் வியாழன் மாலை 6.15 மணியளவில் விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அரசியல் கைதிகளின் உறவுகள் உட்படப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அப்பட்டமான அதிகாரப் பறிப்பு

யானை தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டுமாம்.

அத்தகைய செயல் ஒன்று இடம்பெறுவது குறித்து விசனத்துடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

தமிழரின் உரிமைப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை சிதறடிக்கும் நகாசு வேலைகள் வலு சூட்சுமமாக தென்னிலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எங்கள் கைகளைக் கொண்டு எங்கள் கண்களையே குத்துவிக்கும் கைதேர்ந்த தந்திரோபாயம் அது.

அப்படி ஒரு பெருங் கெடுதலை கொழும்பு ஆட்சிப் பீடம் மதிநுட்பத்துடனும் சாணக்கியத்துடனும் முன்னெடுக்கின்றது. அது புரியாமல் அந்த சுயவழிப்புக்கு நமது சமூகம் முந்தி நின்று துணைபோகும் பேரவலம் இங்கு அரங்கேறுகின்றது.

தமது வாக்கு வங்கியை விஸ்தீரணப்படுத்துகின்றோம் என்ற மதிகெட்ட எண்ணத்தில் சில கோடரிக் காம்பு அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இந்தக் கேவலத்திற்குத் துணை போகின்றார்கள்.

அதனைத்தான் விசனத்தோடும், வேதனையோடும் சுட்டிக் காட்டியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசு கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே. சிவஞானம்.

இந்த நாசவேலையை – இனத்தின் சுயவழிப்பை – தடுத்து நிறுத்த வேண்டிய வடக்கு மாகாண சபையே அதற்கு எதிர்ப்புக் காட்டாமல் துணையோகின்றது. வடக்கு மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இத்தகைய அழிப்பு வேலை முன்னெடுக்கப்படுவதால், சபையில் இன்னும் எஞ்சியிருக்கும் பதவி நிலை மக்கள் பிரதிநிதியான அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இந்த விடயத்தில் தமது எதிர்ப்பை – பொறுப்பை – உரிய முறையில் பதிவு செய்திருக்கின்றார்.

அது அவரின் குரல் அல்ல. ஒட்டுமொத்த மாகாண மக்களின் குரல் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாகாணப் பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்துவதாகக் கூறி அவற்றை மாகாண சபையிடமிருந்து பறித்து மத்திய அரசின் கல்வி அமைச்சின் கீழ் கையகப்படுத்துவது அதிகாரப் பகிர்வுக்கு முரணான செயற்பாடு.

இதற்குப் பின்புலத்தில் புதைந்து கிடக்கும் உள்நோக்கம் மிகத் தெளிவானது. மாகாணத்துக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களை, விடயங்களை மீளப் பறிக்கும் பேரினவாதக் கபடனத்தனத்தின் முக்கிய பகுதிதான் இந்தத் திட்டம்.

சம்பந்தப்பட்ட பாடசாலையையும், அதன் சமூகத்தையும் ஆசை காட்டி தம் வலையில் விழுத்தும், பேரினவாத அரசின் முகவர் அரசியல்வாதிகள் சிலர் இந்த வேலையைத் தமது அரசியல் சாதனைகளாக எண்ணிப் புளகாங்கிதமடைகின்றனர்.

இந்தக் கபடச் செயற்பாட்டுக்குப் பின்னால் ஆழமாகப் புதைந்து கிடக்கும் பேரினவாதக் கையாள்கையைப் புரிந்து கொள்ளாமல் – அதன் தாற்பரியம் விளங்காமல் – தத்தமது பாடசாலைகள் உயரப் போகின்றன என்ற எதிர்பார்ப்புடன் தமிழின சுயவழிப்புக்கு தனிப்பட்ட நபர்களும் பாடசாலை சமூகங்களும் துணை போகின்றன.

நமது ‘கோடரிக் காம்பு’ அரசியல்வாதிகளும் தமிழர்களுக்கு – வடக்கு, கிழக்கு மக்களுக்கு – பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பிடுங்கும் தென்னிலங்கையின் நாசத் திட்டத்துக்கு வழமை போல துணை போய் தங்களின் எலும்புத் துண்டு பிச்சைகளை ஈட்டிக் கொள்கின்றனர்.

நமது அரசியல் தலைமைகள் பலவும் இந்த நாசகாரத் திட்டத்தைப் பார்த்திருக்க, மூத்த அரசியல்வாதி சி.வீ.கே.சிவஞானம் போன்ற ஒரு சிலராவது எச்சரிக்கையடைந்து இந்த ஆபத்துக் குறித்து அபாயச் சங்கு ஒலிக்கின்றார்கள்.

வடக்கு மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்த காலம் முதல் இத்தகைய அத்துமீறலுக்கு இடமளிக்கப்படவேயில்லை. இப்போது அவர்கள் இல்லை என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, தமது முகவரான ஆளுநர் மூலம் இந்தத் தீஞ்செயலுக்கு இணக்கம் பெற்று காரியத்தை ஒப்பேற்றுகின்றனர் மத்திய அரசியல் ஆட்சிப்பீடத்தினரும் அவர்களின் ஏவல் நாய்களான நமது கோடரிக் காம்பு அரசியல்வாதிகளும்.

இத்தகைய அதிகாரப் பறிப்பு அத்துமீறல்களுக்கு துணை போவது – அதுவும் வடக்கு மாகாணத்தின் தமிழ் ஆளுநர் என்ற பந்தாவுடன் துணை போவது – வரலாற்றுத் தவறிழைப்பாகும் என்பதைப் பதிவு செய்து சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எதிர்த்த விடயத்துக்கு அவர்கள் இல்லாத சமயம் அந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட தாம் இதில் துணை போகின்றார் என்பதை ஆளுநர் மறந்து விடக் கூடாது.

அதிகாரப் பகிர்வுக்கு முரணான செயற்பாட்டுக்கு இடமளித்து, ஒத்துழைத்த தமிழ் ஆளுநர் என்று வரலாற்றில் அவர் பதியப்படுவார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சமயத்தில் மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்புபட்ட விடயத்திலோ, அதிகாரங்களைப் பறிப்பது சம்பந்தப்பட்ட தீர்மானங்களிலோ ஆளுநர் முடிவெடுக்க முடியாது என்று ‘திவிநெகும’ சர்ச்சை தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை நாம் கவனிக்கத்தக்கது.

முன்னைய மஹிந்த அரசுக்கு விருப்பமில்லாத அந்தத் தீர்ப்பை வழங்கியமைக்காகவே பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கா அம்மையார் வல்வதமாக பதவியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார். அந்தக் கோட்பாடுக்கு முரணாகச் செயற்படுகின்றமையால்தான் இங்கு பலரும் பதவியில் நீடிக்க முடிகின்றது போலும்...!

# மதத் தலைவர்களின் ஆசியோடு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவேன்!

## யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உறுதி



மதத் தலைவர்களின் ஆசியோடு யாழில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளார் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர், பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

1985 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் கடமையாற்றியிருக்கிறேன் நான் கடைசியாக 2014, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீரிமலை உடுவில் பகுதிகளில் கடமையாற்றியிருந்தேன்.

அந்தக் காலப்பகுதியில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கான வீடுகளை பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்காற்றியிருந்தேன். அத்தோடு விவசாய மக்களுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்திய பாதீன ஒழிப்பில் நான் முக்கிய பங்காற்றியிருந்தேன்.

அதன் பின்னர் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு பின்னர் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு கடந்த ஒருவாரமாகிறது. எனினும் யாழ் மாவட்டம் தொடர்பாக ஏற்கனவே நான் அறிந்தவன். இங்குள்ள மக்களை நன்கு அறிந்தவன்.

எனவே இங்குள்ள மதத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து அவர்களின் கருத்தின் ஊடாக ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மாவட்டத்தில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவேன்.

மேலும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு என்னாலான பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.

அத்தோடு எனது கீழ் பணியாற்றும் சகல இராணுவ வீரர்களும் பொதுமக்களின் சகல சமூக செயற்பாட்டிற்கும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். – என்றும் தெரிவித்தார்.

# இலங்கையில் வியாழனன்று ஒரே நாளில் அதிகளவான நோயாளர் குணமடைவு!

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து நேற்றுமுன்தினம் ஆயிரத்து 869 குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதிவாகிய அதிகபட்ச எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகளவிலான அதாவது 1,520 பேர் குணமடைந்தமையே அதிக எண்ணிக்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 54 ஆயிரத்து 435 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 969 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 781 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 290 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதாக கண்டி மாநகரம் மாற்றமடையுமாம்

*பேராதனை தாவரவியல் பூங்காவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முக்கிய இடமாக மாற்றப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.*

*நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கண்டி நகரத்துக்கு வெளிநாட்டினரை ஈர்க்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் கூறினார்.*

*மேலும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பயணத்திட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.*

# மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு ஐ.நாவில் பிரித்தானியாவும் ஆதரவு வழங்குமாம்!



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து செயற்படத் தயாராக இருப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதி ஜூலியன் பிரத்வைட், இலங்கை தொடர்பான புதிய ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையையும் இங்கிலாந்து பரிசீலிக்கும் என கூறியுள்ளார்.


மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் சமர்ப்பிக்கவிருக்கும் 16 பக்கங்கள் கொண்ட முழுமையான அறிக்கை வெளியான நிலையில் இதுகுறித்து டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில்–இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்டிருக்கும் மிக முக்கியமான புதிய அறிக்கை தொடர்பாக நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் மனித உரிமைகளையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்தி பிரித்தானியா ஆதரவு வழங்கும் என பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் புதிய அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இதனை அமுல்படுத்துவதற்கு இலங்கை தவறும் பட்சத்தில், மாற்று யோசனைகளை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



**இந்தியாவின் தேச பிதா மகாத்மா காந்தியடிகளின் 73 ஆவது நினைவுதினம் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. இது உலகளாவிய ரீதியில் சர்வோதய தினமாக நினைவு கூரப்படுகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை வரையப்படுகின்றது.**

# அகிம்சையே ஆயுதங்களில் மிக வலிமையானது; சத்தியமே வாழ்வில் நிலையானது; உயர்வானது!

இந்திய தேசத்தின் தந்தை என்று போற்றப் பட்ட மோகன்தாஸ் கரம்சந் காந்தி பிறப் பால் இந்துவான போதும் நான் ஒரு கிறிஸ் தவன், இந்து, முஸ்லிம், யூதர் என்று சொல் லிக் கொண்ட சமரச ஞானியாகத் திகழ்ந்தவர்.

அகிம்சையே ஆயுதங்களில் வலிமையானது; சத்தி யமே வாழ்வில் நிலையானது; உயர்வானது என்பதை அனைவருக்கும் உணர்த்தியவர் காந்தியடிகள். பதவிகளை வகிக்காமல் உலக அளவில் புகழ்பெற முடியும் என்று அவர் நிரூபித்தார். 'மகாத்மா' என்ற பெருமைக்கு உரிய ஒருவராக காந்தி அண்ணல் மட் டுமே விளங்குகின்றார். 'எனது வாழ்க்கையே எனது செய்தி' என்று கூறும் அவரது வாழ்க்கை வரலாறு எல் லோருக்கும் ஒரு சிறந்த பாடமாக விளங்குகின்றது.

எந்தப் பிரச்சினையையும் அகிம்சை மூலமாகத் தீர்த்து விடலாம் என்பதை தம் அனுபவத்தில் கண்டு காட்டியவராக விளங்கும் அவர் அகிம்சைப் போராட்ட முறைகளைக் கையாண்டு இந்திய மண்ணுக்கு பிரிட் டிஷ்காரரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத் தார்.

உண்மையும் அகிம்சையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்று கூறும் அவர் இந்திய மக்களுக்கு அறப்போர் மூலம் ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்றுத் தந்தார்.

'தேசபிதா' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் காந்திஜி 1869 ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் இரண்டாம் திகதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர் பந்தர் என்னும் இடத்தில் பிறந்தார்.

காந்திஜி தனது தொடக்கக் கல்வியை ராஜ்கோட் என்னும் இடத்தில் மேற்கொண்டார். மெட்ரிகுலேஷன் படிப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பவநகர் என்னும் இடத் தில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினார்.

காந்திஜிக்கு இளமையிலேயே சட்டம் படிக்க வேண் டும் என்ற ஆசை இருந்தது. அதற்காக இங்கிலாந்து செல்ல ஆசைப்பாட்டார். காந்திஜியை வெளிநாட்டிற்கு அனுப்ப அவருடைய தாயாருக்கு சிறிதும் மனமில்லை. நிலைமையைப் புரிந்து கொண்ட காந்திஜி தாயாருக்கு "வெளிநாட்டில் அசைவ உணவு சாப்பிட மாட்டேன், மது அருந்த மாட்டேன், வேறு பெண்களுடன் தொடர்பு கொள்ள மாட்டேன்" என்ற மூன்று உறுதி மொழிகளை அளித்தார். அதைக் கடைசி வரை கடைப்பிடித்தார். 1888 ஆம் ஆண்டு லண்டன் சென்றார். அங்கு நான்கு வருடங்கள் படித்து 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார்.

"பாரிஸ்டர்" பட்டம் பெற்ற காந்திஜி ராஜ்கோட், மும்பை ஆகிய இரு இடங்களில் வக்கீல் தொழிலைச் செய்தார். வியாபாரக் கம்பனி அழைத்தன் பேரில் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார். அங்கு வெள்ளையர் கள் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் இந்தியர்களை அடிமைகளாக நடத்தினர். அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்காக காந்திஜி வாதாடினார். எனவே அவரை வெள்ளையர்கள் 'கூலிகளின் வக்கீல்' என்று கேலி செய்தனர்.

தென்னாபிரிக்காவில் ஒரு முறை ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் காந்தி பயணம் செய்தார். அதே பெட்டியில் ஒரு வெள்ளையனும் பயணம் செய்தான். அவன் காந்தியை இந்தியன் எனத் தெரிந்து கொண் டான். உடனே பெட்டியை விட்டு இறங்கும் படி சொன் னான். காந்திஜி தனது பயணச் சீட்டைக் காட்டி இறங்க மறுத்தார். வெள்ளையன் காந்தியினுடைய பெட்டி, படுக்கைகளைத் தூக்கி வெளியே எறிந்தான். அப் போதே வெள்ளையர்களின் நிற வெறியைப் புரிந்து கொண்டார் காந்தி.

நிர்மாணத் திட்டங்கள் பலவற்றின் சொந்தக்காரரான காந்தியின் அரிய பல திட்டங்களில் கிராமத் தொழில் களை மேம்படுத்துதல், கதர் அணியச் செய்தல், மது விலக்கை ஏற்படுத்துதல், தீண்டாமை ஒழித்தல், சாதி, மதப் பாகு பாட்டை ஒழித்து இந்து முஸ்லிம் ஒற்று மையை நிறுவுதல், ஆதாரக் கல்வியை மேம்படுத்தல், தேச பக்தியை வளர்த்தல், மகளிர் முன்னேற்றம், விவ சாய தொழிலாளர் நலன், தொழுநோய் ஒழிப்பு, பொரு ளாதார சமத்துவம், சமூகக் கல்வியைப் பரப்புதல், ஒழுக்கத்தை வளர்த்தல், சர்வோதய கிராம சுயராஜ் ஜியம் போன்றன அடங்கியிருந்தன.

இந்திய நாட்டின் விடுதலைக்காக சட்ட மறுப்பு, சத்தி யாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற அறப்போர் களில் ஈடுபட்ட அவரின் ஆன்ம வலிமை கண்டு உலகமே அதிசயித்தது.

ஆங்கில அரசு உப்புக்கு வரி விதித்ததைக் கண் டித்து 1930 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி தண்டி என்னும் இடத்தில் உப்பு அள்ள முடிவு செய்தார். அதற் காக தண்டி யாத்திரை மேற்கொண்டார்.

தென்னாபிரிக்க இந்தியர்களின் உரிமைக்காக அரசை எதிர்த்து பெருங்கிளர்ச்சி நடத்தினார் காந்தி. "இந்தியன் ஒப்பீனியன்" என்னும் பத்திரிகை ஒன்றை யும் தொடங்கி நடத்தினார். சத்தியாக்கிரகம் எனும் அறப்போரினால் அவர் வெள்ளையரின் நிறவெறியை ஒடுக்க முயன்றார் இதனால் அவர் ஏழு தடவைகள் சிறைக்கூடம் புகவும் நேர்ந்தது. இறுதியில் வெற்றியும் கண்டார்.

தென்னாபிரிக்காவில் காந்தியடிகளின் அறப் போரில் முன்னின்று உயிர் துறந்தவர்களில் பெரும் பான்மையானோர் தமிழ் மக்களாவர். அடிகளின் ஆணைப்படி அறப் போர்க் களத்தில் முன்னேறி உயிர்த்தியாகம் செய்த நாகப்பனும் வள்ளியம்மையும் அவரது பேரன்புக்குரிய தமிழ் மக்களாவர். போரில் தமிழ் மக்கள் ஆற்றிய பேருதவியைப் பற்றி அடிகளே தம் தென்னாபிரிக்க சிறையனுபவத்தில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகைகள் மூலம் பாரத தேசத்தில் உரிமை முழக்கம் செய்ய காந்திஜி 1921 இல் ஒத்துழையாமை இயக்கம் உருவெடுக்க வழி கோலினார். பட்டம் பதவி களை உதறித்தள்ளுதல், சட்ட சபைகளை வெறுத் தொதுக்குதல், அயல் நாட்டுத்துணியை விலக்குதல், வரி கொடுக்க மறுத்தல் முதலிய வகைகளிலெல்லாம் ஒத்துழையாமை இயக்கத்தை ஓங்கச் செய்தார். ஒத்து ழையாமைப் போராட்டமே அவரை உலகறியச் செய்தது. பொறுமைப் புரட்சியை உண்டாக்கி ஏகாதிபத்தியத்தை நிலைகுலையச் செய்தார்.

அகிம்சை வழி நடந்த காந்திஜி 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டாலும் அவரின் அகிம்சை, உண்ணாநோன்பு, சத்தியம் போன் றவை என்றும் நிலைத்து நிற்கின்றன. அவருடைய நினைவாக காந்தி கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. காந்தி கிராமிய பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகின் றது. சென்னை கிண்டியில் காந்தி மண்டபம் அமைக் கப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் காந்தியின் உருவச் சிலைகள் நிறுவப் பட்டுள்ளன. உலகப் பேரொளி உத்தமர் காந்தியின் கொள்கைகளால் பெருமளவான மக்கள் ஈர்க்கப்பட் டுள்ளன. காந்தியக் கோட்பாடு உலகம் உள்ளளவும் நிலைபேற ஒன்றாகி மாறி விட்டது.

உரிமை வேட்கையிலே உருவெடுத்த விடுதலைப் போரின் வேட்கையைக் கட்டுப்படுத்தி மாந்தரின் உள் ளத்தைக் காந்தம் போற் கவர்ந்து, அவர்களைப் பற் றிக் கொண்டு முன்னேறி இறுதியில் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த உதய சூரியனாக மகாத்மா காந்தி விளங் குகின்றார்.

**எம்.ஷாந்தன் ஷத்தியகீர்த்தி M.A, M.E**
**ஆசிரியல் "காந்தீயம்"**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**

# நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு ஐ.நாவில் முழு ஆதரவு!

## கனடா அதிரடி அறிவிப்பு



இலங்கையில் நல்லிணக் கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வ தன் அவசியத்தை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியிருப்ப தாக கனடா தெரிவித்துள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பான டுவிட்டர் பதிவி லேயே கனேடிய வெளிவிவ கார அமைச்சர் மார்க் கார்னோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் 'மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதன் அவசியத்தை அடிக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஆகவே இலங்கையில் அமைதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை கனடா வழங்கும். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மகளைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற தந்தை விளக்க மறியலில்!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுள்ள பிர தேசத்தில் 13 வயதுடைய சொந்த மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 11 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) உத்தரவிட்டார்.

மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவரும் 38 வய துடைய 4 பிள்ளைகளின் தந்தை, தனது 13 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தமை யையடுத்து குறித்த சிறுமி தாயாரிடம் தெரிவித்தமை யால் அவரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப் பட்டது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த நபரை உடன டியாக கைது செய்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத் தில் பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டமையையடுத்து அவரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

# பப்பாசி செய்கை அழிவு; வாழ்வாதாரம் பாதிப்பு!

## விவசாயிகள் வேதனை





கொரோனா, கனமழை, உல்லாசப் பயணிகளின் வருகையின்மை முதலான காரணங்களால் திருகோண மலை மாவட்டத்தில் செய்கைச் செய்யப்பட்ட மேட்டு நிலப் பயிர்கள் அழிவடைந்து பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தி யுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோபாலபுரம், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, குச்சவெளி முதலான பகுதிகளில் செய்கை செய்யப்பட்ட மேட்டு நிலப் பயிர்களே இவ்வாறு அழி வடைந்துள்ளன.

இவர்கள் தமது மனைவி, பிள்ளைகளின் நகை களை அடகு வைத்து இந்தப் பயிர்ச் செய்கை மேற் கொண்டனர் எனத் தெரிவிக்கின்றனர்.

முதலீடு செய்யப்பட்ட பெறுமதியைக் கூட இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் கூறு கின்றனர்.

இதேவேளை, கொரோனா, கன மழை, உல்லாசப் பயணிகளின் வருகையின்மை, உரிய விலைக்கு விற்க முடியாமை, வியாபாரிகள் வருகையின்மை முதலான காரணங்களினால் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள தாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் அழிவடைந்த பயிர்களுக்கான இழப்பீட்டை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்







# குழப்பியடிக்கும் யாழ்.மாவட்ட நிர்வாகம்

(ந.லோகதயாளன்)

நிர்வாகத் திறனிற்கும் நேர்மைக்கும், கல்விக்கும் பெயர்போன மாவட்டமாக விளங்கிய யாழ்ப்பாணம் மாவட்டம் இன்று அத்துறைகளில் நேர் எதிர் மாவட்டமாக அரசியல் பின்னகர்த்தலாக காணப்படும் முதன்மை மாவட்டமாகவும் மாற்றப்படுகின்றது.

நாட்டில் ஏற்படும் அரசியல் மாற்றங்களினால் காலத்திற்கு காலம் அமைச்சர்கள் மாறலாம். ஆனால் அதிகாரிகள் சும்மா மாறக்கூடாது. இலங்கையைப் பொறுத்த மட்டில் இது விதிவிலக்காகவே காணப்படும். ஆட்சியாளர்கள் தாம் பதவிக்கு வந்தவுடன் தமக்கு பணியாற்றிய சேவகர்களிற்கு பதவி உயர்விற்கு என்றே பட்டியலிடப்படுகின்றனர்.

இந்த விடயத்துக்காக அமைச்சரைக் கையில் போட்டுக் கொள்வதற்கு அவரின் வெளிநாட்டு மருத்துவச் செலவிற்கான சிட்டைக்குரிய பணத்தையும் செலுத்திய பிரமுகர்களும் நம்மத்தியில் இருக்கின்றார்கள்.

இவ்வாறு இலங்கை முழுவதும் இதுதான் ஆட்சியாளர்களின் செயல்போக்காக் இருந்தபோதும், தற்போது – அதிலும் குறிப்பாக கோட்டபாய அரசின் காலத்தில் – இவ்விடயத்தில் முக்கிய இலக்காக கருதப்படும் மாவட்டமாக யாழ்ப்பாணமே முதன்மை பெற்றுள்ளது.

தேர்தல் காலத்திற்கு முன்பே தொடங்கிய கழுத்தறுப்பின் பட்டியல் நீள்கின்றது.

2019ஆம் ஆண்டு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த கனகேஸ்வரன் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு ஒரே நாளில் தூக்கியெறியப்பட்டு அரசியல் இடமாற்றத்திற்கு பிள்ளையார் சுழியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு அவசர அவசரமாக பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளராக இருந்த நா.வேதநாயகனுக்கு வேண்டுமென்றே அரசியல் நோக்கில் கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டது. வேதநாயகனிற்கு பணி ஓய்விற்காக 3 மாதம் மட்டுமே எஞ்சியிருந்த நேரத்தில் கட்டாய இடமாற்றம் அரச ஊழியர்களை கொதிப்படைய வைத்த போதும் குற்றமிழைத்த சமயம் தண்டிக்கப்பட்டோரின் மனது மட்டும் குளிர்மை கண்டது.

இவ்வாறு இடமாற்றங்கள் செய்ய முற்பட்ட சமயம் பலரும் நமக்கென்ன என இருந்ததன் விளைவு இந்தப் பட்டியல் தற்போது அனுமான் வால் போன்று நீண்டு செல்வதனால் பதறுகின்றனர்.





மட்டக்களப்பிலே ஓர் இந்து ஆலயம் இருந்த பகுதியை எடுத்து முஸ்லிம்கள் பொதுச் சந்தை கட்டியபோது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு எதிராக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கிலே தமக்கு (முஸ்லிம்) சார்பாக தீர்ப்பு அளிப்பதற்காக "நீதிபதியையே மாற்றி எழுதடா தீர்ப்பு என எழுத வைத்தேன்" எனப் பகிரங்கமாகவே மேடையில் கூறும் அரசியல்வாதிகள் வாழும் நாடு அல்லவா நமது நாடு? அவ்வாறானால் நிர்வாக விடயத்தில் மட்டும் எப்படி நீதியை எதிர்பார்ப்பது?

### அரசியல் அடிப்படையில் நியமனங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெறும் 4 ஆயிரம் மக்கள் தொகையை கொண்ட ஓர் பிரதேச செயலாளர் பிரிவினை நிர்வகிப்பதற்கே சிரமப்பட்ட அதிகாரி மாவட்டத்தில் அதிக கிராம சேவகர் பிரிவைக்கொண்ட பிரதேசத்திற்கு மாற்றப்பட்டார். அதனால் படும் பாடு பெரிய பாடாகவுள்ளது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் குளறுபடி காணப்படுவதாக வேறு மாவட்டத்தைச் சேர்ந்த 3 அதிகாரிகளினால் விசாரணை உட்படுத்தப்பட்ட செயலக அதிகாரி பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு இடம் மாற்றம் பெற்றார். அந்த இடமாற்றத்தை வழங்கிய தரப்புக்கு விசுவாசத்தின் பெயரால், அத்தரப்பு ஆட்டையை போட்ட விவகாரத்தில் பொய் சாட்சியும் உரைத்தார். இவரது சாட்சியம் பொய்யானது என்பதை இவரது அடுத்த நிலை உத்தியோகத்தரின் சாட்சியே நிரூபணம் செய்தது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிர்வாகம் மாவட்டச் செயலக கட்டடத்தில் இருந்துதான் இயக்கப்படுகின்றது என்பது பெயருக்கு என்னவோ உண்மைதான். ஆனால் மாவட்ட செயலக அதிகாரிகளினால்தான் இயக்கப்படுகின்றதா என்பதே கேள்விக்குறியாகவுள்ளது. அதாவது 'மாப்பிளை என்னவோ இவர்தான், ஆனால் மாப்பிளை போட்டுள்ள சட்டையை பற்றி எதுவும் தெரியாது' என்ற நிலைமையில் உள்ளது குடாநாட்டு நிர்வாகம். அதனால் தனிப்பட்ட ஆதிக்கத்திற்கு கட்டுப்பட மறுப்பவர்களிற்கும், தமக்கு சார்பாக அறிக்கை இட மறுப்பவர்கள், தமக்கு சார்பான பட்டியலை சரி செய்ய மறுப்பவர்களும் என தூக்கி எறியப்படுகின்றனர்.

### அழுத்தம் மூலம் ஒப்புதல் பெறும் உத்தி

யாழ். மாவட்டச் செயலகத்தில் சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளராக இருந்தவரிற்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக 'பிச்சை வேண்டாம் நாயை பிடி' என அவர் மன்னாரிற்கு சென்றார். இவ்வாறு சென்றவர் 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பணி ஓய்வு பெறுபவர். இதற்கு அடுத்தும் மாவட்டச் செயலகத்தில் பலருக்கு அழுத்தம் தொடர்ந்தது. இதனால் மேலும் ஓர் அதிகாரி 'என்னை விடுங்கள் நான் மன்னார் போகின்றேன்' என்றார். அவரும் சென்று விட்டார். அரசியல்வாதிகளின் அனைத்து ஏவலிற்கும் தலையாட்ட முடியாது என நிமிர்ந்து நின்ற மற்றுமோர் பிரதேச செயலாளர் ஒரே இரவில் 175 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள பிரதேச செயலாளர் பிரிவிற்கு தூக்கி எறியப்பட்டார்.

நேர்மையாகவும், திறமையாகவும் செயல்படும் அதிகாரிகளை என்றுமே இந்த அரசு பாதுகாக்கும் என ஜனாதிபதியும், பிரதமரும் கூறுகின்றனர். ஆனால் அது யாழ்ப்பாணத்திற்கு மட்டும் விதி விலக்கோ என்னவோ தெரியவில்லை. யாழ்ப்பாண நிர்வாகத்தின் லட்சணம் மேற்கூறியவாறே உள்ளது. இவ்வாறு நெருக்கடிகள் அச்சுறுத்தலின் மத்தியில் நிதி, நிர்வாக மோசடிகளில் எண்பிக்கப்பட்டவர்கள் அரசியல்வாதிகளிடம் தஞ்சமடைவதனால் பதவி உயர்விற்கும் குறைவு இல்லாமலேயே உள்ளது.

### பொதுச் சேவை ஆணைக் குழுவிற்கே தெரியாமல் நடக்கும் இடமாற்றம்

நிர்வாக சேவை அதிகாரிகளில் மாவட்டச் செயலாளர் ஆயின் அமைச்சரவை அனுமதியின் பெயரிலும் ஏனைய தரத்திலானோர் பொதுச் சேவை ஆணைக் குழுவின் அனுமதியின் பெயரிலேயுமே இடமாற்றம் செய்யப்பட முடியும். ஆனால் இங்கே மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் அமைச்சின் மேலதிக செயலாளரின் அதிரடி உத்தரவில் இடம்பெறுகின்றன. இவை எவற்றுக்கும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடையாது. அவ்வாறானால் வெருட்டலில் உத்தியோகத்தர்கள் சென்ற பின்பு, உத்தியோகத்தரும் இடம்மாறிச் சென்று விட்டார் எனக் கூறியே தழுவல் அனுமதி பெறப்படவுள்ளது.

அரசியல் நோக்கில் தூக்கி எறியப்படும் உத்தியோகத்தர்களிற்கு காலையில் ஒப்புதல், மதியம் இடமாற்ற உத்தரவு, மாலையில் விடுவிப்பு என வழங்கும் மேலதிகாரியோ அரசியல்வாதிகளின் ஆதரவானவர் எனக் கருதப்படுபவர்களிற்கு 2 மாதங்களின் முன்பு வந்த இடமாற்ற உத்தரவிற்கு அது மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்ற பெயரில் இன்று வரை விடுவிப்பு வழங்காமல் இழுத்தடிக்கின்றனர்.

> “யாழ். மாவட்டத்தில்
> நிர்வாக நடைமுறைகளுக்கு அப்பால்
> அரசியல் நோக்கில் அதிகாரிகள் சிலர்
> தூக்கி எறியப்படுகின்றனர்; சிலர்
> விரட்டப்படுகின்றனர் அதேநேரம்
> அரசியல்வாதிகளுடன் ஒட்டி
> நிற்பவர்கள் ஊழல் புரிந்தாலும் பதவி
> உயர்வுக்குச் சிபாரிசு, இதனால்
> அதிகாரிகள் மட்டத்தில்
> பதற்றமும் குழப்பமும்.”

கண்டு கொள்ளாதவர்கள் அல்லது அக்கறை அற்றவர்கள் மாவட்டத்தை ஆள்வதன் விளைவே இது.

ஆக, நிர்வாகத் திறனிற்கும், நேர்மைக்கும், கல்விக்கும் பெயர்போன மாவட்டமாக யாழ்ப்பாணம் இருக்கலாம், ஆனால் இருப்பு முக்கியம் எனச் சிந்திக்கும் அவலத்திற்கு எஞ்சியுள்ள அதிகாரிகள் தள்ளப்படுகின்றனர். இதனால் அதன் முன்னைய தரத்துக்கு நேர் எதிர்ப் போக்கு மாவட்டமாக அது மாறிவிடுமோ என ஆதங்கப்படும் மூத்த அதிகாரிகள் இதனை! யாரோடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்?' என்கின்றனர்.

இத்தகைய அவலத்திற்குள் மாவட்டம் தள்ளப்பட்டு கொண்டிருக்கும் சூழலிலும் மாவட்டச் செயலாளரோ நாடே பற்றி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னன் போன்று எதுவுமே தெரியாது உட்கார்ந்திருக்கின்றார். அவரும் பாவம் தனது மேசையில் இருந்த – பொறியியலாளர் வழங்கிய – ஆவணமே எவ்வாறு வெளியே போனது எனத் தெரியாது எனக் கூறியவர் தானே....!

அதனையாவது வாயால் கூறினார். திட்டத்திற்கு சிபார்சு செய்யும் பெயர்ப் பட்டியல்களை எனது ஒப்புதலோடு செய்ய பிரதேச செயலாளர்களை அறிவுறுத்துங்கள் என அரசியல்வாதி தமக்கு அனுப்பிய கடிதத்தினை அப்பிடியே பிரதி செய்து சகல பிரதேச செயலாளர்களிற்கும் அனுப்பி வைத்தவர்தானே மாவட்டச் செயலாளர்...!

(11 ஆம் பக்கம் பார்க்க...)

நேற்று 29 ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் எனது கைத்தொலைபேசி சிணுங்கியது. இந்த அகால வேளையில் யார்? எனப்பார்த்தேன்.

மறுமுனையில் இலக்கிய நண்பர் தெய்வீகன். உறக்கத்தை குழப்பியதற்கு மன்னிக்கவும் எனச் சொல்லிவிட்டு, எங்கள் மல்லிகை ஜீவா கொழும்பில் மறைந்துவிட்டார் என்ற ஆழ்ந்த துயரம்மிக்க செய்தியைச் சொன்னார்.

அத்துடன் எனது உறக்கம் முற்றாக களைந்துவிட்டது.

தனது வாழ்நாள் முழுவதும் களைக்காமல் ஓடி ஓடி ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அயராமல் உழைத்த மல்லிகை ஜீவா இனியாவது நிரந்தரமாக ஓய்வு பெறட்டும். என்று என்னை நானே தேற்றிக்கொண்டு, பொங்கிவந்த கண்ணீரை சிரமப்பட்டு அடக்கியவாறு இந்த நினைவுப் பதிகையை அஞ்சலிக்குறிப்பாக சமர்ப்பிக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் ஜோசப் - அன்னம்மா தம்பதியருக்கு 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி பிறந்திருக்கும் டொமினிக் ஜீவா, கொழும்பில் தனது ஏகபுதல்வன் திலீபனின் இல்லத்தில் 29 ஆம் திகதி (29 ஜனவரி 2021) தமது 93 வயதில் மறைந்தார்.



முருகபூபதி

1971 காலப்பகுதியிலும் அதே உணர்ச்சிப்பிழம்பாக அவர் பேசியதை கண்ணுற்றபொழுது அதற்குப்பொருள் தர்மாவேசம் என்று புரிந்துகொண்டேன். அத்தருணத்தில் மகாகவி பாரதியின் 'ரௌத்திரம் பழகு' என்ற சொற்பதத்தையும் தெரிந்துகொண்டிருந்தேன்.

# மல்லிகை ஜீவா விடைபெற்றார்! 01

## வரலாறாகிவிட்ட ஈழத்தின் இலக்கியக்குரல்!!

யாழ்ப்பாணம் அரியாலையில் நாவலர் வீதியில் அமைந்த ஸ்ரான்லி கல்லூரியில் (தற்பொழுது கனகரத்தினம் மத்திய கல்லூரி) 1962ஆம் ஆண்டளவில் எனக்கும் எனது மச்சான் முருகானந்தனுக்கும் ஆறாம் வகுப்பில் புலமைப்பரிசில் அனுமதி கிடைத்தது. அப்பொழுது எனக்கு பதினொரு வயதிருக்கும்.

நான் முதல் தடவையாக பனை மரங்களைப் பார்த்தது அக்காலத்தில்தான். அதற்கு முன்னர் அந்தக்கற்பகதருவை பாடசாலை பாடப்புத்தகங்களில்தான் பார்த்திருக்கின்றேன்.

ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமானதன் பின்பு பல இலக்கிய மற்றும் ஆய்வு நூல்களில் பனைமரங்கள் அட்டைப்படமாகின.

ரஜனி திராணகம சம்பந்தப்பட்ட யாழ். பல்கலைக்கழக மனித உரிமை ஆசிரியர் சங்கத்தின் வெளியீடான முறிந்த பனை, மூத்த பத்திரிகையாளர் கார்மேகத்தின் ஈழத்தமிழர் எழுச்சி, செ. யோகநாதன் தொகுத்த ஈழச்சிறுகதைகள் வெள்ளிப்பாதசரம், ஜெயமோகனின் ஈழத்து இலக்கியம், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் யாழ்ப்பாணம் சமூகம் - பண்பாடு - கருத்து நிலை உட்பட பல நூல்கள் பனைமரத்தை ஒரு குறியீடாகவே அட்டைகளில் சித்திரித்துள்ளன.

வவுனியாவைக் கடந்தவுடன் ஏ9 பாதையின் இரு மருங்கும் தென்பட்ட பனைமரங்களை கல்விக்காக பயணித்த அக்காலத்தில் பரவசத்துடன் பார்ப்பேன்.

அவ்வாறு அந்த மண்ணில் நான் பரவசத்துடன் பார்த்த ஒரு மனிதரின் பெயர் டொமினிக்ஜீவா.

எங்கள் மாணவர் விடுதியின் சார்பாக மாதாந்தம் நடத்தப்படும் ஒரு நிகழ்வுக்கு அவர் பிரதம பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் நான் அவரைப்பார்த்தது இல்லை. அவர் அருந்துவதற்கு ஒரேஞ் பார்லி போத்தல் ஒன்றை மேசையில் வைத்திருந்தார்கள்.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் அணிந்து வந்திருந்தார். மேடையில் உரத்த குரலில் பேசினார். அவ்வப்போது கைகளை உயர்த்தினார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனின் வாழ்க்கைச் சம்பவங்களை விவரித்தார். சங்கானையில் நடந்த ஒரு சாதிக் கலவரம் பற்றிச் சொன்னார்.

எனக்கு ஏதோ கொஞ்சம் புரிந்தது. அவரது முகத்தையும் மேசையிலிருந்த குளிர்பானப்போத்தலையும் பார்க்கிறேன். அவரது நெற்றி இடைக்கிடை புடைத்து நரம்புகளும் தெரிந்தன.

எனக்கு அந்த வயதில், அவர் ஏதோ கோபத்தில் பேசுவதாகவே புரிந்தது.

தனது உரை முடியும் வரையில் அவர் அந்த குளிர்பான போத்தலை தொடவே இல்லை. நீண்டநேரம் பேசியும் அவரது நா வரண்டுவிடவில்லை என்பதும் எனக்கு ஆச்சரியமானது.

காலப்போக்கில் சுமார் பத்தாண்டுகள் கழித்து அதாவது 1971 காலப்பகுதியிலும் அதே உணர்ச்சிப்பிழம்பாக அவர் பேசியதை கண்ணுற்றபொழுது அதற்குப்பொருள் தர்மாவேசம் என்று புரிந்துகொண்டேன். அத்தருணத்தில் மகாகவி பாரதியின் 'ரௌத்திரம் பழகு' என்ற சொற்பதத்தையும் தெரிந்துகொண்டிருந்தேன்.

இலங்கையில் முதல் முதலாக தமிழில் சிறுகதை இலக்கியத்திற்காக தேசிய சாகித்திய விருதைப் பெற்றவர். விருது பெற்ற அந்தக் கதைத் தொகுதியின் பெயர்: தண்ணீரும் கண்ணீரும்.

விருதை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் திரும்பிவருகிறார். ஊர்மக்கள் அச்சமயம் யாழ்ப்பாண மேயராக பதவியிலிருந்த துரைராஜாவின் தலைமையில் மாலை அணிவித்து அவரை வரவேற்கின்றனர்.

யாழ். ரயில் நிலையத்துக்கு சமீபமாகவே அவரது வீடு அமைந்திருக்கிறது. அவருக்கு நேரம் சொல்வதற்கு அங்கு வரும் ரயில்கள் போதும்.

### வாசம் பரப்பிய மல்லிகை வாடி வீழ்ந்தது மண்ணில்!

வாசம் பரப்பிய மல்லிகை
வாடி வீழ்ந்தது மண்ணில்
தேசம் தெரியும் ஜீவா
தேசம் விட்டேகினார் விண்ணில்

வெள்ளுடை வேந்தனாய் ஜீவா
வீதியில் நடந்துமே திரிந்தார்
கல்லிலும் முள்ளிலும் நடந்தார்
கருத்துடன் எழுதியே உயர்ந்தார்

எள்ளவும் அஞ்சவும் மாட்டார்
எடுத்தை முடித்துமே நிற்பார்
கள்ளமில் மனமுடை ஜீவா
காலனின் கையிலே சென்றார்

மூலையில் ஒதுங்கியே நில்லா
முயற்சியை கையினில் எடுத்தார்
நாளையே எண்ணியே உளத்தில்
நம்பிக்கை எழுத்தினில் விதைத்தார்

எழுதிடும் கரங்களுக் கெல்லாம்
ஏணியாய் ஆகினார் ஜீவா
மல்லிகைத் தொட்டிட்ட பலபேர்
மனமெலாம் உறைகிறார் ஜீவா

ஈழத்து இலக்கிய பரப்பில்
இருக்கிறார் விருட்சமாய் ஜீவா
ஆழமாய் மல்லிகை அமைத்தார்
அவரெங்கும் படர்ந்துமே இருந்தார்

நீண்டநாள் சஞ்சிகை தந்தார்
நிமிர்வுடன் எழுத்தினை ஆண்டார்
ஆண்டவன் திருவடி அடைந்தார்
ஆனாலும் தெரிகிறார் ஜீவா

கவிஞர் மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - அவுஸ்திரேலியா




கஸ்தூரியார் வீதியில் தந்தையாரின் ஜோசப் சலூனை கவனித்துக் கொண்டார்.

அத்துடன் எழுதத் தொடங்கினார். புத்தகக்கடை பூபாலசிங்கமும் ராஜகோபல் என்ற அன்பரும் அவருக்கு வாசிக்கும் ஆர்வத்தை தூண்டியமையுடன் சிறந்த நூல்களையும் படிக்கக் கொடுத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியிலும் அங்கத்துவம் பெற்றிருந்தார். ஐக்கியதேசியக்கட்சி பதவியிலிருந்த காலப்பகுதியில் ஒரு மேதின ஊர்வலத்தில் அவர் கலந்துகொண்டு தொழிலாள, விவசாய பாட்டாளி மக்களுக்காக கோஷம் எழுப்பியவாறு சென்றபொழுது யாரோ எறிந்த கல் அவரது நெற்றியைப் பதம்பார்த்தது.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கே கடமையிலிருந்த அவரது இலக்கிய நண்பரும் மருத்துவருமான டொக்டர் நந்தி அவரது காயத்துக்கு இழையும்போட்டு, மருந்திட்டு கட்டுப்போட்டு வீட்டிற்கு சென்று ஓய்வெடுக்குமாறு சொன்னார்.

ஆனால் இந்த தர்மாவேசசிங்கம் சும்மா இருக்குமா?

அந்த இரத்தம் கசிந்த நெற்றிக்கட்டுடன் மேதின மேடைக்குத்திரும்பி, இதோ பாருங்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் பரிசு என்று இரத்தம் கசிந்த நெற்றியை காண்பித்து, சோஷலிசம் மலரும் காலம் தூரத்தில் இல்லை என்று ஆக்ரோஷமாக குரல் கொடுத்தார்.

இந்த வரலாற்றையெல்லாம் அவரது மல்லிகையில் 1972இல் நான் எனது முதலாவது சிறுகதை எழுதிய பின்புதான் தெரிந்துகொண்டேன்.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

# தடுப்பூசி செலுத்தியபின் சுற்றுலாப் பயணிகளுக்கான வரையறைகள் இலகுபடுத்தப்படும் - பிரசன்ன உறுதி

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்ற பின்னர் சுற்றுலாப் பயணிகளுக்காக விதிக்கப்பட்டிருக்கும் வரையறைகள் இலகுபடுத்தப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொவிட் சுகாதாரப் பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் காரணமாக ஏற்படும் பாதிப்பு தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொரோனாத் தடுப்பூசி தற்போது நாட்டுக்கு வந்திருக்கின்றது. அதனை தேவையானவர்களுக்கு ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முடிந்ததும் சுற்றுலாத் துறைக்குத் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் சுகாதார நிபந்தனைகளை இலகுபடுத்த எதிர்பார்க்கின்றோம். சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளமையால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. அதனால் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அத்தியாவசியமானதாகும்.

மேலும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் சுகாதார நிபந்தனையை தொடர்ந்து அமுல்படுத்திக்கொண்டு, சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முடியாது. சுற்றுலா துறையை அடிப்படையாக்கொண்டு நாட்டில் 3 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அதனால் சுற்றுலாத்துறை எமது நாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும். அதனைப் பாதுகாப்பதுடன் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

அத்துடன் எமது நாட்டு சனத்தொகையில் 56 தொடக்கம் 60 வீதமானவர்களுக்கே கொரோனா தடுப்பூசி வழங்க முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர். 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது நல்லதல்ல எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.



அதேபோன்று 20 வீதமானவர்களுக்கு இலவசமாக கொரோனாத் தடுப்பூசி கிடைக்கின்றது. அதனால் ஏனையவர்களுக்கான தடுப்பூசியை அரசாங்கம் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கின்றது. - என்றார்.

# ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறமாட்டேன் தேசிய அமைப்பாளர் பதவியையும் ஏற்க மாட்டேன்!



என்கிறார் நவீன்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஒருபோதும் வெளியேற மாட்டேன். கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படவில்லை. அதனால் வழங்கப்பட்ட தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்க முடியாது.

நாட்டில் தற்போது சிறந்த அரசாங்கமும், பலமான எதிர்க்கட்சியும் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அனைத்து தரப்பினருடம் பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராகவும், செயற்குழுவின் உறுப்பினராகவும் செயற்படுவேன்.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்தவாரம் மறுசீரமைக்கப்பட்டு முக்கிய பதவிகளுக்கான புதிய உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. கட்சியின் பதவி நிலையில் மாத்திரம் மாற்றம் ஏற்படுத்தினால் கட்சி அடைந்துள்ள பின்னடைவை சீர்செய்ய முடியாது.

கட்சியின் தலைமைத்துவம் தொடக்கம் அனைத்து மட்ட பதவி நிலைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுத்து மூலமாகப் பல முறை தெரிவித்துள்ளேன்.

கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படவில்லை. அதனால் வழங்கப்பட்ட தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்க முடியாது எனத் தெரிவித்துள்ளேன்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் மக்களின் வெறுப்பைப் பெற்றுக் கொண்டுள்ளது. நாட்டில் தற்போது சிறந்த அரசாங்கமும் இல்லை. பலமான எதிர்க்கட்சியும் இல்லை என நாட்டு மக்கள் கருதும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று பலமான ஓர் எதிர்க்கட்சி அவசியமாகவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறாமல் பொறுமையாக செயற்பட்டிருந்தால் அவருக்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் கிடைக்கப் பெற்றிருக்கும்.

பொதுத்தேர்தலின் பின்னர் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து பலமான எதிர்க்கட்சியை ஸ்தாபித்திருக்கலாம்.

ராஜபக்ஷக்களின் பலவீனமான அரசாங்கத்தைத் தோற்கடிக்க அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக செயற்பட்டு கட்சியை முன்னெடுத்து செல்லும் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பலம் வாய்ந்த ஐக்கிய தேசிய கட்சியை நாட்டு மக்கள் புறக்கணிப்பதற்கான காரணம் என்ன, தவறுகளை எவ்வாறு திருத்திக் கொள்ள வேண்டும் என்ற விடயங்கள் குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

# தேசியப் பட்டியல் ஆசனம் ரணிலுக்கே!

## தோல்வியடைந்தவர்களில் அவருக்கே தகுதி என்கின்றார் அர்ஜீன ரணதுங்க



ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்ல வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியில் தோல்வியடைந்தவர்களில் இருந்து நாடாளுமன்றம் செல்ல அவரே தகுதியானவர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கட்சியை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் ஈடுபடவில்லை. கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டுள்ளோம்.

இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைவதற்குப் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் கட்சி இரண்டாகப் பிளவடைந்தது.

ஜனநாயகத்தை அரசாங்கத்திடம் பாதுகாக்க வேண்டுமாயின் பலமான எதிர்க்கட்சி ஒன்று செயற்பட வேண்டிய தேவை காணப்படுகிறது.

தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றினைத்து வலுவான திட்டங்களை வகுப்பது தற்போதைய பிரதான செயற்பாடாகக் காணப்படுகிறது.

நாட்டின் எதிர்கால பயணத்துக்கு கட்சி அடிப்படையில் சிறந்த கொள்கைத் திட்டம் வகுக்காமையின் காரணமாகவே வழங்கப்பட்ட சிரேஷ்ட உப தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளேன். ஒரு தரப்பினரது தேவைக்கமைய கட்சியை மறுசீரமைப்பதால் அடைந்த தோல்வியை சீர் செய்ய முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் இதுவரையில் ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை தோல்வியடைந்தவர்கள் மத்தியில் இருந்து கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளோம். அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டும் தகைமை அவருக்கு மாத்திரமே உண்டு. – என்றார்

# புதிய வகைப் போதையுடன் ஒருவர் மஹரகமவில் கைது!

*மஹரகம பகுதியில் 35 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரெவ்வல பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*பன்னிப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவரிடமிருந்து ஒரு கிலோ ஐந்து கிராம் டெட்ரா ஹைட்ரோ கெனபினோல் எனப்படும் ஏஷ் ஒயில் ரக போதைப் பொருள் கைப்பற்றப் பட்டுள்ளது.*

*சந்தேக நபர் இந்த போதைப் பொருள்களை ஏற்றி வந்த காரை பறிமுதல் செய்துள்ள குற்றத்தடுப்பு பிரிவினர், சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.*

# சஜித்தைச் சந்தித்தார் நோர்வேத் தூதுவர்!





இலங்கைக்கான நோர்வே தூதர் திரினா யுரான்லி எஸ்கடெல் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பாக விவாதித்தார்.

இதன்போது கொரோனா அச்சுறுத்தலில் இராஜதந்திர உதவிகளின் முக்கியத்துவம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தூதரின் கவனத்தையும் ஈர்த்தார்.

இந்த நிகழ்ச்சியில் டாக்டர் ஹர்ஷா டி சில்வா, எரான் விக்ரமரத்ன, நிரோன் பெரேரா, டாக்டர் ரோஹன் பல்லேவத்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நில அபகரிப்புடன் ஒன்றிணைந்த இன அழிப்பே குருந்தூர்மலை!

## சிறிதரன் எம்.பி. காட்டம்



தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த குருந்தூர்மலை உள்ளிட்ட இடங்களின் தமிழர்களின் அடையாளங்களை முழுமையாக அழித்து, அங்கு இராணுவத்தினரின் உதவியுடன் சிங்கள பௌத்த அடையாளங்களை நிறுவுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது.

இது நில அபகரிப்புடன் ஒன்றிணைந்ததாக முன்னெடுக்கப்படும் இன அழிப்பாகும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு -

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு பகுதிக்கு அருகிலுள்ள தமிழர்களின் பாரம்பரிய கிராமமான குருந்தூர் மலையில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தைத் தகர்த்ததன் பின்னர், அங்கு நடைபெறும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக நாம் சென்றிருந்தோம். அப்போது அங்கிருந்த இராணுவத்தினர் எம்மை உள்ளே செல்லவிடாமல் மறித்தார்கள்.

இவையனைத்தும் முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத்தளபதியின் பணிப்புரைகளுக்கு அமைவாகவே நடைபெறுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஏனென்றால், உள்ளே செல்லவேண்டுமாயின் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடம் அனுமதிகோரவேண்டும் என்று அங்கு கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் கூறவில்லை.

மாறாக, இராணுவத் தளபதியே தமக்குக் கட்டளையிட வேண்டும் என்றே குறிப்பிட்டார்கள். இதனூடாக நில அபகரிப்புடன் இணைந்த கலாசார அபகரிப்பையும் முன்னிறுத்தி செயற்படும் முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத் தளபதி தலைமையிலான இராணுவத்தினரின் செயற்பாடுகளைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது.

நீண்டநேர தர்க்கத்தின் பின்னர் குருந்தூர் மலைப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டபோது, அங்கிருந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தகர்க்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, அங்கு காணப்பட்ட சூலம் காணாமல் போயுள்ளது. ஏற்கனவே பட்டு (சால்வை) கட்டப்பட்ட சூலமொன்று அங்குள்ள குழியொன்றிலே இருப்பதை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க புகைப்படமெடுத்து, அவருடைய பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். இப்போது அந்தக் குழியிலும் சூலம் இல்லை.

இவற்றினூடாகத் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த இடங்களின் அடையாளங்களை அழித்து, அங்கே சிங்கள பௌத்த அடையாளங்களை நிறுவுவதற்கான முயற்சியை இராணுவத்தினரின் உதவியுடன் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அதுமாத்திரமன்றி இதன்மூலம் நில அபகரிப்புடன் இன அழிப்பும் மேற்கொள்ளப்படுகின்றமை வெட்டவெளிச்சமாகியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் உரிய சட்டநடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். - என்றார்.

---

### 1,000 ரூபாவை வழங்கினால்

# கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து இ.தொ.காங்கிரஸ் விலகுமாம்!

### என்கிறார் ஜீவன் தொண்டமான்



அரசாங்கம் தலையிட்டு பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுக்குமாக இருந்தால் கூட்டு ஒப்பந்தத்தின் சம்பள பகுதியில் இருந்து தமது தரப்பு முழுமையாக விலகுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஹற்றனில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பாகக் கம்பனிகளுக்கு அதிகமான அழுத்தங்கள் தற்போது பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த அரசாங்கத்தில் இந்த அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. எனினும் கம்பனிகள் கொடுக்கமுடியாது என்ற விடாப்பிடியிலேயே இருக்கின்றன.

இந்நிலையில் சம்பள நிர்ணயசபை ஊடாக சம்பளத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த விடயத்தை அரசாங்கம் முன்னெடுத்தால் கூட்டு ஒப்பந்தத்திலும் சம்பளப் பேச்சுவார்த்தையிலும் இருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

எனினும் கூட்டு ஒப்பந்தம் என்பது வெறுமனே சம்பளப்பேச்சு மட்டுமல்ல. அதில் தொழிலாளர்களின் நலன்புரி விடயங்கள், உரிமைகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகத் தெரியாதவர்கள் கூட்டு ஒப்பந்தத்தை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

தொழிலாளர்களின் நலனில் எவராவது பொறுப்பேற்றால் நாங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து எப்போது வேண்டுமானாலும் விலகத் தயார். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஐ.டி.எச். தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார் சுகாதார அமைச்சர்

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அங்கொடவில் அமைந்துள்ள தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.



கொரோனா தொற்றுக்குள்ளான அமைச்சர் ஹிக்கடுவவில் உள்ள ஒரு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். இந் நிலையில் கடந்த வியாழக்கிழமை காலை அவர் கொழும்பின் புறநகர் பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள சேர்ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் அதிகளவான கொவிட் அறிகுறிகளை வெளிப்படுத்தியமையின் காரணத்தால் வியாழன் மாலை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் அவர் நன்றாக குணமடைந்து வருகிறார் என சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், அவரது கணவர் காஞ்சனா ஜெயரத்ன மற்றும் அவரது மகள் மீது வியாழக்கிழமை நடத்தப்பட்ட இரண்டாவது சோதனைகளில் கொவிட் 19 இற்கு எதிர்மறையாக முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

---

# தேசியளவில் தடுப்பூசி வழங்கல் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்!

### சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே உறுதி

பெப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் தேசிய அளவில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சிறந்த தலைமைத்துவம் காரணமாக தடுப்பூசி பயன்பாடு எதிர்பார்த்ததை விட மிக விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.


நாரஹன்பிட்ட இராணுவ வைத்தியலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நடைபெற்ற முதலாவது தடுப்பூசியை வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மேற்கண்டவாறு கூறினார்.


மேலும் தடுப்பூசிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியதற்காக இந்தியாவுக்கு, அரசாங்கத்தின் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவித்த அவர், கொவிஷீல்ட் தடுப்பூசிகளைத் தவிர்த்து வேறு தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தடுப்பூசி பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் என நம்புவதாகவும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

---

# தினம் ஒரு விவசாயத் தகவல்



**தாவரப் பீடை நாசினிகள்**

பீடைகளை விரட்டக்கூடிய, எண்ணிக்கையை குறைக்கக்கூடிய வகையில் தாவரப்பகுதிகளில் இருந்து பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இயற்கை நாசினிகளே தாவரப் பீடை நாசினிகள் எனப்படும்.

**நன்மைகள்**

01. நச்சுத் தன்மை, பக்க விளைவுகள் அற்றது. (மனிதன், விலங்கு, நன்மை தரும் பூச்சிகள்)
02. செலவு குறைவு.
03. இலகுவாக கிடைக்கக் கூடியவை.
04. தெளிகருவி அவசியமில்லை.

**பீடை நாசினியாக பாவிக்கக் கூடிய தாவரங்கள்**

* **பால் உள்ள தாவரங்கள் -** எருக்கலை, கள்ளி, அலரி
* **கசப்புத்தன்மையுள்ள தாவரங்கள் -** வேம்பு, சீந்தில், தும்பை
* **மணமுடைய தாவரங்கள் -** நொச்சி, துளசி, பப்பாசி
* **கால்நடைகள் விரும்பாத தாவரங்கள் -** ஆடாதோடை, நாயுண்ணி
* **பூச்சி பீடைகள் தாக்காத தாவரங்கள் -** காட்டாமணக்கு, மஞ்சவண்ணா

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணப் பாடசாலைகளை மத்தி கையகப்படுத்த முயற்சி!



## அதிகாரப் பகிர்வுக்கு முரணான செயல் இது சி.வி.கே. சிவஞானம் ஆளுநருக்குக் கடிதம்



**மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்று தரமுயர்த்துவதாகக் கூறி அவற்றை மத்திய அரசு கையகப் படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும் என வட மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு எடுத்துரைத்துள்ளார்.**

தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல என்றும் அவர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

'யாழ்.மாவட்ட பாடசாலைகள் தேசியப்பாடசாலைகள் ஆக்கப்படுதல்' இது தொடர்பில் வட.மாகாண ஆளுநருக்கு அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து பிரதான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன எனவும், அவை வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் இருந்து மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுகின்றன எனவும், கடந்த வாரம் ஊடகச் செய்திகளின் மூலமாக அறிய வந்துள்ளது.

குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத அரச பாடசாலைகள் அரசமைப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயம் என்ற ரீதியில் இந்தப் பத்துப் பாடசாலைகளும் இதுவரை மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தவையாகும். அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட. மாகாண சபை இயங்கிய காலத்தில் இவ்வாறான முயற்சிகள் யாவும் இங்கே மறுதலிக்கப்பட்டமை சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

இந்த நிர்வாக அதிகார மாற்றத்தின் தர்க்கவியல் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. அதாவது நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக இருப்பினும் அவை மாகாண சபையால் சீர்திருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வது ஒரு பிரச்சினை அல்ல.

அவற்றை விட, தேசியப் பாடசாலைகளுக்கு ஏதாவது மேலதிக வசதி, வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாயின் அவற்றை மாகாண நிர்வாகத்தின் மூலம் வழங்க முடியும். அவற்றுக்காக ஏற்கனவே நடைமுறையில் இருந்த மாகாண சபை அதிகாரத்தை பிடுங்கி மத்திக்குக் கொண்டு செல்லுதல் அதிகாரப்பகிர்வை முழுமையாக மீறும் செயற்பாடாகும்.

இந்தச் செயற்பாடு சமூகத்தில் தேசியப் பாடசாலைகள் ஏதோ தரமுயர்ந்தவை எனவும், ஏனையவை தரம் குறைந்தவை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வுமனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல.

மேலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சபை இல்லாத சூழ்நிலையில் இவ்வாறு செய்வது ஜனநாயக விரோதமானது என்பதையும், இந்தச் செயற்பாடு நிறுத்தப்படவேண்டும் என்பதையும் எமது தீர்க்கமான வேண்டுகோளாகப் பதிவு செய்து கொள்கிறேன்.

தற்போது வடக்கு மாகாண சபையின் சட்டரீதியான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டிக் கொள்கின்றேன். - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# தடுப்பூசி குறித்து அச்சம் வேண்டாம்!

## வைத்தியர் உறுதியுரை



தடுப்பூசி குறித்து எவ்வித அச்சமும்கொள்ளத் தேவையில்லை என தேசிய தொற்று நோய்களுக்கான நிறுவனத்தின் மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

முதல் மருத்துவ அதிகாரியாக, இந்திய கோவிட் தடுப்பூசி பெற்றுக்கொண்டமையை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தடுப்பூசி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஆராய்ச்சிகளையும் துல்லியமாக ஆய்வு செய்தமையைத் தொடர்ந்தே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது எனக் குறிப்பிட்ட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம, இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

### சுமந்திரன், கஜேந்திரன் வலியுறுத்தியும்

# 'பௌத்த விகாரை' என்ற சொல்லை அறிக்கையிட மறுத்தார் அங்கஜன்!

## வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பவம்

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்ட மற்றும் படாத இடங்களில் பௌத்த விகாரைகள் உருவாக்கப்படுகின்றன. அனுமதியற்ற பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றமையைக் கண்டித்து, 'பௌத்த விகாரைகள்' உருவாக்கப்படும் போது அனுமதி பெறவேண்டும் என்று வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செ.கஜேந் திரன் ஆகியோரால் வலியுறுத்தப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு, வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தனாலும் மற்றும் பங்குகொண்டவர்களால் அறிக்கையிட்டு தீர்மானமாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தப்பட்டது.

இதன்போது கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய அங்கஜன் இராமநாதன் -

'பௌத்த விகாரை' என்ற பதத்தை விடுத்து, சகல கட்டுமானங்களுக்கும் அனுமதிபெறவேண்டும் என்று அறிக்கையிடுவோம் என்று தெரிவித்தார்.

பதிலுக்குக் கருத்துரைத்த சுமந்திரன் எம்.பி. -

'பௌத்த விகாரை' என்று பதிவிடுவதற்கு தாங்கள் ஏன் தயங்குகின்றீர்கள்? இங்கு கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களுமாகவே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக முன்வைக்கின்றார்கள். தாங்கள் மட்டும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றீர்கள். - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த செல்வராஜா கஜேந்திரன் எம்.பி. -

ஒரு பௌத்த விகாரை எவருக்கும் தெரியாமல் விடுவிக்கப்படாத பிரதேசத்தில் உருவாக்கப்பட்டதன் பிற்பாடு அதை சட்ட விரோதம் என்று இடித்தழிப்பது கடினமான ஒரு விடயம். தாங்கள் குறிப்பிட்டமை போன்று இராணுவம் ஒரு கட்டடத்தை உருவாக்கினால் அதை பின்னர், இடித்தழிக்கலாம். விகாரை சிங்கள மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயம். இராணுவம் அமைத்த கட்டடத்தை இடித்தால் சிங்கள மக்கள் எவரும் எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார்கள். ஆனால், விகாரைகளை இடித்தழிக்கும்போது தென்னிலங்கையில் அது மிகப்பெரும் கிளர்ச்சியாக மாறும். ஆகவே, உருவாக்கப்படுவதற்கு முன்னர் நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி அவதானமாகச் செயற்பட வேண்டும். - என்றார்.

ஆனால், எவருடைய கோரிக்கைகளையும் ஏற்கமறுத்த அங்கஜன், 'கட்டடங்கள்' என்ற பொதுப் பதத்தை அறிக்கையில் பிரயோகிக்கும்படி கூறி அடுத்த விடயத்துக்கு நகர்ந்தார்.


# விலங்குக்கு வைத்த மின் கம்பியால் இரு குடும்பஸ்தர்கள் பலியாகினர்!

## திருக்கேதீஸ்வரத்தில் சோக சம்பவம்

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு சற்று தொலைவில், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் இரண்டு சடலங்களை இன்று (வெள்ளிக்கிழமை) காலை மன்னார் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

அடம்பன் பள்ளிவாசல் பிட்டி பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மூக்கையா மகேந்திரன் (வயது - 45) மற்றும் வேட்டையார் முறிப்பு பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப் பிள்ளை தேவசங்கர் (வயது - 37) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு அருகிலுள்ள மின் கம்பத்தில் இருந்து சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பைப் பெற்று, வீதிக்கு சற்று தொலைவில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைத்திருந்த மின் இணைப்



பில் சிக்கியே இருவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இன்று காலை குறித்த இருவரும், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டமையை அவதானித்த பிரதேச வாசிகள், மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வருகைதந்து மின் இணைப்பைத் துண்டித்ததன் பின்னரே சடலங்களை பொலிஸார் எடுத்துள்ளனர்..

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனாத் தொற்றிலிருந்து இதுவரை 55,398 பேர் மீண்டனர்

நாட்டில் இன்று மேலும் 963 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 398 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, 61 ஆயிரத்து 586 பேருக் குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ள நிலையில் அதில் 5 ஆயிரத்து 891 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 720 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 297 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்துக்கு வந்தன கொரோனாத் தடுப்பூசிகள்!

## போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட சுகாதாரத்துறையினருக்குக் கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை ஆரம்பிக்கப் படவுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத் துவர், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக் குத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை தொடக்கம் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இரண்டாயிரத்து 300 கொரோனாத் தடுப்பூசி மருந்துகள் கோரப்பட்டுள்ளன எனவும், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அதனை இன்று பெற்றுக்கொள்வோம் எனவும் அவர் கூறினார்.

இலண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் உருவாக் கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா தடுப்பு மருந்து இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் 5 லட்சம் மருந்துகள் இந்தியாவால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த தடுப்பூசி முதற் கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலி ஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி இன்று மேல் மாகாணத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ராஜீவ் கொலைக் குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதிக்கப்பட்டது. முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக்கு தூக்கு தண்டனையும், நளினி உள்ளிட்ட மற்ற 4 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரும் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார்கள். இந்த கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க காலதாமதம் ஏற்பட்டதாக கூறி, அவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து 2014 - ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், இந்த 3 பேரையும் விடுதலை செய்வது குறித்து அரசு உரிய முடிவு எடுக்கலாம் என்றும் கூறியது.

இதைத்தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் மட்டுமின்றி இந்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரையும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்தது.

தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கூட்டணி அரசு, உச்சநீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், 7 பேரையும் விடுதலை செய்ய இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

அதன் பின்னர் குறித்த வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட அரசியல் சாசன அமர்வு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு மறுஆய்வு மனு ஒன்றை தாக்கல் செய்தது.

இதற்கிடையே, தாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளமையால் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும் தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அளித்தனர். மேலும், தன்னை விடுவிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினி மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

இதனையடுத்து, அவர்களது கோரிக்கையை பரிசீலித்த தமிழக அரசு, அவர்கள் அனைவரும் 24 ஆண்டுகளாக சிறையில் உள்ள காரணத்தால், அவர்களை விடுதலை செய்ய முடிவு செய்து, அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரி கடந்த 2016-ம் ஆண்டு 2 கடிதங்கள் எழுதியது. ஆனால் அதற்கு மத்திய அரசு பதில் வழங்கவில்லை. இதற்கிடையே, தமிழக அரசு ஏற்கனவே தாக்கல் செய்திருந்த மறுஆய்வு மனு மீதான விசாரணையில், 7 குற்றவாளிகளையும் விடுவிப்பது குறித்து மத்திய அரசின் கருத்தை 3 மாதங்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதைத்தொடர்ந்து, தற்போது சிறையில் உள்ள கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரின் உடல் ஆரோக்கியநிலை, மன நிலை, பொருளாதார பின்னணி, சமூக பின்னணி, குடும்பச் சூழல், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை விவரம் மற்றும் வழக்கு தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியது.

ராஜீவ்காந்தி கொலை கைதிகள் பற்றி மத்திய அரசு கேட்ட விவரங்கள் மற்றும் ஆவணங்களை தமிழக அரசு அனுப்பி வைத்தது. இந்த நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஏப்ரல் 18ஆம் தேதி கடிதம் எழுதியது. அதில் ராஜீவ் கொலை குற்றவாளிகள் 7 பேரை விடுதலை செய்ய கூடாது என கூறியது.

இந்தநிலையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேறறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலையை மத்திய அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை வைத்தது. ஆனால், இவர்களை விடுவிக்க மறுப்பு தெரிவித்து மத்திய அரசு தாக்கல் செய்த கூடுதல் ஆவணத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி ரஞ்சன் கோகாய் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, 'ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகள் 7 பேரை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து தமிழக அரசு முடிவெடுக்க முழு அதிகாரம் உள்ளது; இது சம்பந்தமாக தமிழக அரசு தமிழக ஆளுநருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்' என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன் தொடராக கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழக அரசு, ஆளுநருக்கு பரிந்துரை செய்யவில்லை என்று பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆளுனர் பன்வாரிலால் புரோகித்திடம் ஏழு பேரையும் விடுதலை செய்யக்கோரும் கடிதத்தினைக் கையளித்திருக்கின்றார். குறித்த நிகழ்வின் போது அமைச்சர் ஜெயக்குமாரும் பிரசன்னமாகியிருந்தார் என தமிழக ஊடகங்கள் ஒளிப்படத்துடன் கூடிய செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில் பிந்திக்கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆளுநரின் செயலாளர் இந்தியத் தலைநகர் டெல்லிக்கு அவசர பயணமாகியிருப்பதாக நம்பகரமாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில் தமிழகத்தில் ஆட்சி செய்யும் அ.தி.மு.க. அரசுக்கும் மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.கவுக்கும் இடையிலான இணக்கமான அரசியல் உறவின் வெளிப்பாடாக ஏழுபேரும் விடுதலையாகக் கூடிய சாத்தியம் நூறு சதவீதம் காணப்படுவதாக தமிழகத்தின் மூத்த ஊடகர்கள் தெரிவித்தனர் என 'அருவி' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# மீள் குடியேறும் குடும்பங்களுக்கு யு.என்.டி.பியால் வாழ்வாதார உதவி!

கொழும்பு, ஜன.30

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்து மீள்குடியேறும் குடும்பங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும், வாழ்வாதார உதவிகளையும் நேரடியாகவும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கூடாகவும் செயற்படுத்திவருகின்றது. சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் 2017 ஆம் ஆண்டு முதல் யு.என்.டி.பியின் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

சி.எப்.சி.டி. 2017 ஆம் ஆண்டு 4 கோடியே 30 லட்சம் ரூபாவுக்கும் 2018 ஆம் ஆண்டு 6 கோடி ரூபாவுக்கும் 2019 ஆம் ஆண்டு 2 கோடியே 30 லட்சம் ரூபாவுக்கும் 2020 ஆம் ஆண்டு 3 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் யாழ். மாவட்டத்தில் நோர்வே, பிரித்தானிய அரசுகளின் யு.என்.டி.பி. ஊடான நிதியின் மூலம் மீள் குடியேறும் குடும்பங்களுக்கான தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள், பயிற்சிகள் உள்ளீடுகள் போன்றன வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காலத்தில் யு.என்.டி.பியால் 83 விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளமையுடன், 607 பயனாளிகள் விவசாயச்செய்கைக்கான உதவிகளையும், 193 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்புக்கான உதவிகளையும், 231 பயனாளிகளுக்கு பல்வேறுபட்ட சிறு தொழில் முயற்சிகளுக்கான உதவிகளையும் வழங்கி மீள்குடியேறியவர்களது வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டல் எம்மால் முடிந்துள்ளது. இந்தத் திட்டங்களைச் சிறப்பாகச் செயற்படுத்துவதில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், விவசாயத் திணைக்களம், கால்நடை வைத்திய திணைக்களம் என்பன முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளன.

2021 ஆம் ஆண்டில் பிரித்தானிய உயர்ஸ்தானிக ராலய நிதியில் யு.என்.டி.பி. ஊடாக யாழ் மாவட்டத்தில் சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, யாழ்ப்பாணத்தில் 2 கோடியே 25 லட்சம் ரூபாவுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளில் ஒரு கோடியே 81 லட்சம் ரூபாவுக்கும் வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. சகல உதவித்திட்டங்களும் மீள்குடியேற்றம், குடும்பநிலை சார்ந்த முன்னுரிமையில் கிராமசேவகர்களூடான தகவல்களின் அடிப்படையில் பிரதேச செயலர்களது அங்கீகாரத்துடன் வழங்கப்படும்.

குறித்த பிரதேசங்களில் மீள்குடியேறி உதவி தேவைப்படும் தகுதியுடைய குடும்பங்கள் உங்களது கிராமசேவகர்களூடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

# தியாகராஜ சுவாமிகளின் இசையாராதனை நிகழ்வு!

இந்துசமயப் பேரவை – யாழ்ப்பாணம் நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவர்கள் நடத்தும் சற்குருதியாகராஜசுவாமிகள் இசையாராதனை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஈசான சிவ.சக்திகிரீவன் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ச.பாலச்சந்திரனும், சிறப்புவிருந்தினராக யாழ் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனும்கலந்துகொள்ளவுள்ளனர்.

மங்களவிளக்கேற்றலைத் தொடர்ந்து, நடராஜப் பெருமானுக்கு விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து சற்குரு தியாகராஜா சுவாமிகளுக்கு விஷேட புஷ்பாஞ்சலி தீபாராதனை தேவாரம் என்பன இடம்பெறும்.

நிகழ்வில் வரவேற்புரையை கலாவித்தகர் சி.சிவ ஞானராஜாவும் தொடர்ந்து தலைமையுரை நடைபெற்று இசைக் கலைஞர்களதும், நல்லைக்கந்தன் குரு ஷேத்திர மாணவர்களதும் இசை ஆராதனையும் நடைபெறும்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பங்கு கொள்ளுமாறு அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## குழப்பியடிக்கும்....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஒரு மாவட்ட நிர்வாகமே ஏறக் குறைய நாற்றம் எடுக்கும் அளவிற்கு சென்று கொண்டிருக்கும் சூழலில் மேலும் சில அதிகாரிகளும் குறிவைக்கப்பட்டு விட்டனர் எனத் தெரிந்தும் மாகாண ஆளுநர் கூட தலையிடாது கண்மூடியுள்ளார் என்றால், அதற்கு ஒரே காரணம் என்ன செய்வது, எனது சிபார்சில் வந்தவர் மாவட்ட அதிகாரியாக இருக்கும்போது அவருக்கு நிர்வகிக்க தெரியாது என்றால் தனது சிபார்சு தப்பு எனக் கருதி விடுவார்களே என்ற குழப்பமே காரணமாக உள்ளது.

கொலைக் கலாசாரத்திற்கு மத்தியிலும் பணியாற்றிய எம்மால் இந்த அரசியல் பழிவாங்கல் பிய்ச்சல் பிடுங்கலிற்கு மத்தியில் பணியாற்ற முடியவில்லை யென அதிகாரிகள் புலம்புகின்றனர்.

அரசியல்வாதிகள் பச்சை காகம் பறக்கின்றது என்றால் அடுத்த கொப்பில் இருக்கும் சிவப்பு காகத்தையும் நான் துரத்தி விடவா என வினாவுவதற்கு சில அதிகாரிகள் தள்ளப்படுகின்றனர் அவர்களாக தூக்கி எறிந்தால் 150 கிலோ மீற்றருக்கும் அப்பால் போவதனை விட அருகிலேயே வேறு நிர்வாகம் போகமுடியுமா என வழிதேடி அலைகின்றனர் சில அதிகாரிகள்.

ஆயுதக் கலாசாரத்திற்குள் கடமையாற்றிய நாம் தற்போது யாழ் குடாநாட்டில் நிலவும் அரசியல் கலாசாரத்திற்குள் பணியாற்ற முடியவில்லை. அப்போது உயிர் ஒருநாள் போய்விடுமோ என்ற அச்சம். தற்போது தினமும் உயிர்போகும் அச்சமாகவுள்ளது. கேட்கவோ, பார்க்கவோ யாரும் அற்ற அநாதைகள் போன்ற மன உணர்வே ஏற்படுகின்றது.

இத்தனைக்கும் காரணம் சில பிரதேச செயலாளர்களும் மூத்த அதிகாரிகளும். தமக்கு வரும் கடிதங்கள் ஆவணங்களை உறையில் இருந்து வெளியே எடுத்து திகதி, முத்திரையை குற்றிய பின்பு அவர்கள் அவற்றை வாசிப்பது இல்லை

வந்த கடிதம் தமது விசுவாச அரசியல்வாசிக்கு பயன்படுமா, இதில் அரசியல் ஆதாயம் தேட முடியுமா என ஆராய்ந்து அவ்வாறான கடிதங்களை நிழல்பிரதி செய்து அனுப்ப வேண்டியவர்களிற்கு அனுப்பிய பின்பே திகதி முத்திரை குத்தும் அளவிற்கு அரச விசுவாசத்திற்கு அப்பால் அரசியல்வாதி விசுவாசம் கொண்டோரே முக்கிய காரணம் என பிரதேச செயலாளர் ஒருவர் பெரும் கவலையோடு தெரிவித்தார்.

## முதல் நாளில் 5, 286 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று 2 ஆயிரத்து 280 சுகாதார ஊழியர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டது எனச் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அத்துடன் நேற்று முதல் நாளில் 5 ஆயிரத்து 286 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆயிரத்து 886 பேருக்கும், கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 803 பேருக்கும், கொழும்பு தெற்கு போதனா வைத்தியாலையில் 781 பேருக்கும், நாரஹேன்பிட்டிய இராணுவ வைத்தியசாலையில் 600 பேருக்கும், பனாகொட இராணுவ முகாமில் 400 பேருக்கும், பொரளை சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் 382 பேருக்கும், ஹோமாகம வைத்தியசாலையில் 190 பேருக்கும், முல்லேரியா வைத்தியசாலையில் 108 பேருக்கும், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் 80 பேருக்கும், வெலிசறை கடற்படை முகாமில் 56 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் நேற்று ஏற்றப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை ஏற்றப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளால் எவருக்கும் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை எனவும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலை (ஐ.டி.எச்.), கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் நாரஹேன்பிட்டிலுள்ள இராணுவ வைத்தியசாலை ஆகியவற்றில் தடுப்பூசிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் ஐ.டி.எச். வைத்தியசாலையில் நடைபெற்ற நிகழ்வில் அந்த வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த அபேவிக்கிரம முதலாவதாகத் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டார். அதையடுத்து வைத்தியசாலையின் சிரேஷ்ட தாதியான சம்பிகா ஷீதானி உடுகமகோரலவிற்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொரோனாத் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வைத்தியர் ராசியா பென்சே, கொரோனாக் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அமல் ஹர்ஷ டி சில்வா, சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர, ஐ.டி.எச். வைத்தியசாலையின் பணிப்பாளர் ஹசித அத்தநாயக்க உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நேற்றுக் காலை நாரஹேன்பிட்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது இராணுவ சிப்பாய்கள் மூவருக்கு ஒரே நேரத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

# எக்னலிகொட தொடர்பில் நீதி கோரிப் போராட்டம்!

## மட்டக்களப்பில் நேற்று



கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட ஊடக வியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊடக அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பு நேற்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது.

உழைக்கும் ஊடக தொழிற்சங்க சம்மே ளனம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவிய லாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளரகள், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப் பினர் பிரசன்னா இந்திர குமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ் மற்றும் மட்டக் களப்பு மாநகர முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, 'காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்?', 'சர்வதேசமே பதில்சொல்!', 'காணாமல் ஆக்கப் பட்ட ஊடகவியலாளர் எங்கே?', 'படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடு!' போன்ற கோசங் களை எழுப்பி அவர்கள் நீதி கோரினர்.

# தனியார் பஸ் தடம் புறழ்வு 13 பேருக்குப் படுகாயம்!

## புனாணையில் காலை சம்பவம்




மட்டக்களப்பு பிராதன வீதி புனா ணையில் இடம் பெற்ற பஸ் விபத்தில், 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவையில் இருந்து கல் முனை நோக்கி போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ், நேற்று (வெள்ளிக் கிழமை) காலை 6.30 மணிக்கு பயணிக ளுடன் பயணித்துள்ளது. இதன்போது புனாணைப் பகுதியில் முன்னாள் சென்ற வாகனத்தை முந்தி செல்லமுற்பட்டபோது, வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி, தடம் புரண்டு விபத்துக்குள்ளாகி யுள்ளது.

அதில் பயணித்த 13 பேர் படுகாயம டைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானைத் தந்தங்களுடன் முல்லையில் இருவர் கைது



முல்லைத்தீவு மாவட்டம் களிக்காட் டுப் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் காணப்பட்ட யானையைச் சுட்டுக்கொன்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் இரு வரை பொலிஸார் கைது செய்துள்ளமை யுடன் யானைத் தந்தங்கள் இரண்டு மற்றும் நாட்டுத் துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

உயிரிழந்த நிலையில் மிகப் பெரிய தோற்றம் கொண்ட யானை ஒன்றின் சடலம் காட்டுப் பகுதியில் காணப்பட்டுள் ளது. உயிரிழந்து பல நாள்ளாக இருக் கலாம் என்று கருதப்பட்ட அந்த யானை யின் தலைப் பகுதியில் காயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

அதேவேளை அந்த யானையின் தந்தங்கள் இரண்டும் அறுத்து எடுக்கப் பட்டிருந்தன. இதனால் தந்தத்திற்கா கவே அது கொலை செய்யப்பட்டிருக் கலாம் என்ற கோணத்தில் பொலிஸா ரும், வனஜீவ ராசிகள் திணைக்களத்தி னரும் தீவிர விசாரணை மேற்கொண் டனர்.

இந்நிலையில் நேற்று குறித்த சந் தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட் டுள்ளமையுடன் அவர்களிடம் இருந்து தந்தங்கள் இரண்டு, துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவரு கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

# ஈழத்து முதுபெரும் இலக்கிய கர்த்தா டொமினிக் ஜீவா மறைவு பேரிழப்பு!

## சிறிதரன் எம்.பி. இரங்கல்



ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளரும், பதிப்பாளருமான மல்லிகை இதழாசிரியர் டொமினிக் ஜீவா தனது 94 ஆவது வயதில் கடந்த வியாழக் கிழமை இயற்கை எய்தியிருக்கின்றமை ஈழத்து இலக்கிய உலகுக்கு நேர்ந்திருக்கின்ற பேரிழப்பாகும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

டொமினிக் ஜீவாவின் மறைவு தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இலக்கியவாதியாக, படைப்பாளியாக, பதிப்பாளராக, மல்லிகை இதழாசிரியராக என்று பல்பரிமாணங்களில் கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக ஈழத்து இலக்கியத்துறைக்கு இவர் ஆற்றியுள்ள அரும்பணி மிகக் கனதியானது. யாழ்ப்பாணச் சமூகத்தின் வெவ்வேறுபட்ட உணர்திறன்களை, வாழ்வியல் போக்குகளை அடையாளம் காட்டுபவனாக அமைந்திருந்த இவரது படைப்புக்கள் பெரும்பாலும் சாதியத்தின் பிடிக்குள்ளான மனித வாழ்வின் அழுத்தங்களாலும், துடிப்புக்களாலும், போராட்டங்களாலும் கட்டமைக்கப்பட்டிருந்தமையே அவை அடித்தட்டு மக்களையும் சென்றடையக் காரணம்.

ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் செல்நெறி வெளிப்பாடுகள் பற்றிய சிரத்தைக்கும், தேடலுக்குமான ஆவணமாகவே இவரது 'டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள்' என்ற தொகுப்பைப் பார்க்க முடியும். இனங்காணப்படாமலிருந்த எத்தனையோ ஈழ இலக்கிய ஆளுமைகளின் முகங்களை மல்லிகை இதழ் மூலம் வெளிக் கொணர்ந்த இவரது பணியும் இந்த இடத்தில் மனங்கொள்ளப்பட வேண்டியதே!

சாகித்திய மண்டல விருது பெற்ற 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் முதுகாலைமணி பட்டப்படிப்புக்கு உப பாடநூலாக வைக்கப்பட்டதையிட்டு மகிழ்ந்தாலும், இலங்கையில் அவருக்கும் அவரது படைப்புக்களுக்கும் சரியான அங்கீகாரம் வழங்கப்படவில்லையோ என்ற ஆதங்கம் எம் நெஞ்சை நெருடாமலில்லை. இவற்றையெல்லாம் கடந்து ஈழத்துக்கும் தமிழகத்திற்குமான இலக்கியப் பாலமாக, முதுபெரும் இலக்கியச் சிகரமாக, பதிப்புத்துறை வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த எழுத்தாளர் டொமினிக் ஜீவாவின் ஆத்மா அமைதிபெற பிரார்த்திப்பதோடு, இவரது பேரிழப்பால் பரிதவித்து நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், இலக்கிய உறவுகளுக்கும் என் அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.
– என்றுள்ளது.

# இராணுவத்துக்கு காணி வழங்கும் தீர்மானம் சிறிதரனின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது!

## கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பவம்

கிளிநொச்சி நகரில் உள்ள நூலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகில் உள்ள இராணுவத்தினரால் கையகப்படுத்தியுள்ள காணிகளை தமக்கு பாரதீனப்படுத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அரச திணைக்களங்கள் ஒவ்வொன்றும் தமக்கு பாராதீனப்படுத்த வேண்டிய காணிகள் தொடர்பில் பரிசீலித்தவேளையிலேயே இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கே நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

எந்த நகரத்திலும் இல்லாதவாறு ஏற்கனவே கிளிநொச்சியில் பல காணிகளை இராணுவம் சுவீகரத்து வைத்திருக்கிறது. மாவட்ட செயலகத்துக்குள்ளேயே இராணுவம் காணியின் ஒரு பகுதியைச் சுவீகரித்து வைத்திருக்கிறது. இவ்வாறு நகருக்குள்ளேயே பல ஏக்கர் காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கிறார்கள்.

எனவே, இந்த தீர்மானத்தை நிறைவேற்றவேண்டாம் என விடாப்பிடியாக இருந்ததை தொடர்ந்து இராணுவத்திற்கு பாராதீனப்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றாமல் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்று அதிகரிப்பதற்குக் காரணம் மக்களின் கவனக்குறைவும் பொறுப்பின்மையுமே!

## இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம்

பொது மக்களின் கவனக்குறைவு மற்றும் பொறுப்பின்மை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள், அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற மறந்துவிட்டார்கள் என அச்சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் இது மிகவும் பரிதாபகரமான சூழ்நிலை என்றும் சுகாதார அதிகாரிகளாக இந்த நிலைமையைக் காணும்போது மிகவும் வருத்தமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு மக்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் சென்று சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கச் சொல்ல முடியாது என்றும் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று நாட்டில் பரவுவதற்கு மக்களின் அலட்சியமே தற்போதைய ஆபத்தான சூழ்நிலைக்கு வழி வகுத்தது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சுகாதார அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

